Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



ரா ம் கோ
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 01 திங்கட்கிழமை (13.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 135



முட்டையிடும் சேவல்

13



தப்புவதற்கு ஓட்டம்

12



வேலைவாய்ப்பில் சரியான திட்டம்

14



மீண்டும்

11

# உள்ளக விசாரணை பொறிமுறை அவசியமானதென வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு, உள்ளக விசாரணைப் பொறிமுறை யொன்று அவசியமானதெனவும், எனவே அதனை. உருவாக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் ஸ்டீபன் ரப் அரசிடம் வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்து 33 மாதங்கள் ஆகின்ற நிலையிலும், இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதது குறித்து ஸ்டீபன் ரப் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், இம்மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறுமானால், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் என அரசுக்கு ஸ்டீபன் ரப் கடுந்தொனியில் கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு கடந்தவாரம் வந்த ஸ்டீபன் ரப், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரமுகர்கள் பலரைச் சந்தித்து (15 ஆம் பக்கம் பார்க்க)


## அமெரிக்க பிரதிநிதிகள் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் இலங்கைக்கு வந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்கான உதவிச் செயலாளர் மரியா ஒட்டேரா மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று மாலை 4.15 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் கொழும்பில் உள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

# காணி, பொலிஸ் அதிகாரம் குறித்து அச்சமடையத் தேவையில்லை



(கொழும்பு)

காணி, பொலிஸ் அதிகாரங்களுடனான 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வழங்கினால் அது நாட்டைத் துண்டாடுவதாக இருக்காது. இதையிட்டு சிங்கள மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் சிறந்த தீர்வாக இருக்கும். இதில் குறைபாடுகள் இருப்பதாக அரசோ அல்லது கட்சிகளோ கருதினால் அதை 13 பிளஸ் மூலம் நிவர்த்தி செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை - இந்திய (15 ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் விலை அதிகரிப்பு எதிராக ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தமையும் ஈரான் நெருக்கடியுமே இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவதற்கு காரணம் என அரசாங்கம் கூறுவதை ஜே.வி.பி. நிராகரித்துள்ளது.

இவ்விடயத்தில் அரசாங்கம் தன்னைத் தானே முரண்படுவதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார். உலக சந்தையில் விலை அதிகரித்ததை இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு அரசாங்கம் காரணமாக காட்டினாலும் தற்போது கையிருப்பிலுள்ள எரிபொருட்கள் ஒரு மாதத்திற்கு முன்னரே இறக்குமதி செய்யப்பட்டவை (15 ஆம் பக்கம் பார்க்க)

# கொல்லங்கலட்டி பகுதியிலுள்ள கிணற்றில் மனித எச்சங்கள்



(தெல்லிப்பளை)

யாழ். வலிகாமம் வடக்கு கொல்லங்கலட்டி பகுதியில் மக்கள் மீள்குடியேறிய பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து துப்புரவு செய்த வேளை, அதிலிருந்து மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, கொல்லங்கலட்டி பகுதியிலுள்ள பிள்ளை யார் ஆலயத்தினை அண்டியுள்ள வீடொன்றின் உரிமையாளர் தமது வளவினை துப்புரவு செய்யும் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கண்டி சென்ற யாழ். இளைஞன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(கொழும்பு)

உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு சென்ற இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் சிவாதரன் (வயது - 24) என்ற இளைஞனே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார் எனக் கூறப்படுகின்றது.

குறித்த இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக கண்டி போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இளைஞன் கொலை செய்யப்பட்டாரா? தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது தவறுதலாக கிணற்றில் விழுந்தாரா? என்பது குறித்து கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடாவில் கிண்டல் வவுனியாவில் சந்திப்பு

## கூட்டமைப்பின் நாடகம் அம்பலம்

(கொழும்பு)

வவுனியாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு வட,கிழக்கு சிவில் சமூகத்தை சந்திக்கவுள்ளதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையிலான வட, கிழக்கு சிவில் சமூகம் என்ற அமைப்பு அண்மையில் வட, கிழக்கு தமிழர்களின் தீர்வு சம்பந்தமாக அரசாங்கத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த நிலையில் அவர்களின் குற்றச்சாட்டுக்கள் குறித்தும், வட, கிழக்கு சிவில் சமூகத்தின் (15 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை இராணுவமயப்படுத்தடுவே படைகள் தயார் நிலையென அறிவிப்பு

## கண்டிக்கின்றன எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக இடம்பெறக்கூடிய ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமாக படைத்தரப்பை தயார் நிலையில் வைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

அத்துடன், நாட்டை இராணுவ மயமாக்குவதற்கான மற்றொரு முயற்சி இது எனவும் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

மக்கள் போராட்டத்துக்கான அமைப்பின் பிரச்சாரச் செயலாளர் வர்ண ராஜபக்ஷ இது தொடர்பாகக் கூறுகையில், வடக்கில் தற்போது காணப்படும் இராணுவ ஆட்சியை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கையே இது எனக் குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை, பொலிஸ் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இராணுவத்தை நிலைநிறுத்தக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் உதவுகிறது

## கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

(கரவெட்டி)

கல்விக் குறிக்கோள்களை உயர்மட்டத்தில் நிறைவேற்றிக் கொள்ள கற்றல் செயற்பாடுகளுடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் சந்தர்ப்பமாக இல்ல மெய்வன்மைப் போட்டி அமைகிறது என கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களது இயலுமை, இயலாமை, சமநிலை, ஆளுமைப் பண்பு என்பவற்றை மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை என்பன இனங்காண இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் வழிவகுப்பதுடன், அவற்றை நேர்த்தியாக்கவும் வழி செய்கின்றது.

இவையன்றி மாணவர்களது உள, உடல், ஆரோக்கியத்திற்கும் உதவி புரிகின்றது என்பதை பெற்றோர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்வதன் மூலம் அதிகமான மாணவர்களை இப்போட்டிகளில் இணைத்துக்கொள்ள முடியும். அந்தவகையில், இப்பாடசாலையின் பெரும்பாலானவர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். மூன்று இடைவேளை நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் இப்பாடசாலையின் ஆரம்பப் பிரிவின் மாணவர்களையும் இடைநிலைப் பிரிவின் மாணவர்களையும் உள்வாங்கப்படுகின்றனர்.

எனவே இப்பரவலாக்கல் மூலம் பெரும் மாணவர்கள் தம் திறனை வெளிக்கொணர பாடசாலை சந்தர்ப்பம் வழங்கியமை ஒரு சிறப்பம்சமாகும்.

ஒரு மனிதன் முழுமைபெற்று நற்பிரஜையாக வாழ விளையாட்டு உதவுகின்றது. சிறு வயது முதல் மாணவரை விளையாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஆளுமை நிறைந்த ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். இச்செயற்பாடு கல்வி கற்பதற்கும் வேறு சிந்தனை மற்றும் பொழுது போக்கு ஆகியவற்றுக்கும் இவ் விளையாட்டு உதவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பெற்றோர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சாவகாசமாக இருந்து படித்தவர் 10 ஆயிரம் ரூபாவை இழந்தார்

(திருநெல்வேலி)

சனசமூக நிலையமொன்றில் பத்திரிகைகள் படிப்பதற்காகச் சென்ற ஒருவர் தனது பணப்பையுடன் 10 ஆயிரம் ரூபாவை இழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் தாவடி வன்னியசிங்கம் வீதியில் உள்ள சனசமூக நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருகையில், நீளக் காட்சட்டையின் பின்புறப் பொக்கெட்டில் "பேர்சை" வைத்திருந்த அவர் பத்திரிகைகள் படிப்பதற்காகப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தபோது சாவகாசமாக இருப்பதற்கு அந்தப் பேர்ஸ் தொல்லை கொடுத்துள்ளது.

இதனால் பேர்சை வெளியே எடுத்து ஆசனத்தில் தனக்குப் பக்கத்தில் அதனை வைத்துவிட்டுத் தொடர்ந்து பத்திரிகைகளைப் படித்தார். படித்து முடிந்ததும் அப்படியே எழுந்து தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

சில மணி நேரம் கழித்தே பேர்சின் ஞாபகம் அவருக்கு வந்ததும், அவர் அமர்ந்திருந்த இடத்தை விரைந்து வந்து பார்த்தபோது ஆசனத்தில் வைக்கப்பட்டிருந்த பேர்ஸ் காணாமல் போயிருந்தது.

10 ஆயிரம் ரூபா பணம், சாரதி அனுமதிப் பத்திரம், அடையாள அட்டை, காப்புறுதி மற்றும் வரிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் அதற்குள் வைக்கப்பட்டிருந்தாகவும் தெரிய வருகிறது. (137)

# கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள பின்தங்கிய கிராம மக்களுக்கு இலவச கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் குமுழமுனை கிராமத்திலுள்ள மக்களுக்கே இச்சேவை வழங்கப்பட்டுள்ளதுடன், இச்சேவை குமுழமுனை மகா வித்தியாலயத்தில் தெ.தர்மகுலதேவன தலைமையில் சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இச்சேவை நடைபெற்றது.

தலைமை வகித்தவரின் தனிப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட இச் சேவையில் கண்பார்வை குறைவான 280 பேருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், சமூக சேவைகள் அமைச்சின் இணைப்பாளர் சுனில் கல்கேன கலந்து கொண்டு மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்ததுடன், துறைசார்ந்த மருத்துவர்களால் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. (04)

# தமிழரின் கிராமியக் கலைகள் ஒருபோதும் 'அமெரிக்கன் அரிசி'யாக மாறக்கூடாது

## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர்

(வவுனியா)

தமிழர்களுடைய கலைகளை பார்த்து தமிழர்களாக பிறந்ததற்கு நாம் அனைவரும் பெருமையடைய வேண்டும் என வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தெரிவித்தார்.

நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாலயத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

கலைகள் என்பது கிராமங்களுக்குரியதே. கிராமங்களிலேயே அவை தோன்றின. ஆனால் நாம் நகரத்தாருக்குரியதாக சொல்லிக்கொண்டிருக்கின்றோம். பேச்சு மொழி தோன்றுவதற்கும் எழுத்து மொழி தோன்றுவதற்கும் முற்பட்டது கலை வடிவம். சைகை வடிவில் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் விளங்கப்படுத்தினார்கள். அப்படிப்பட்ட சைகை வடிவத்தை வைத்துத்தான் நாட்டிய வடிவங்களை உருவாக்கியிருக்கின்றார்கள்.

அரிவு வெட்டுவது எப்படி என்று இன்று பிள்ளைகளுக்கு தெரியாது. இதற்கான இயந்திரங்கள் வந்துவிட்டதனால் உழவர் நாட்டியங்கள் மூலமே நாம் அரிவு வெட்டுவதை பார்க்கின்றோம். அதேபோலவே மாடு பூட்டி உழுவதை காணமுடியாதுள்ளது. அவற்றையெல்லாம் நாம் கலைகள் மூலமே பாதுகாத்து வருகின்றோம். பல ஆண்டுகள் சென்றாலும் நாட்டிய வடிவங்கள் மூலமே இவற்றை காக்கவேண்டியுள்ளது.

இன்று கிராமிய கலைகளை நகரத்தவர்கள் வாங்கி அதனை உலகம் பூராகவும் பரப்பிவருகின்றனர். உதாரணமாக அமெரிக்கா அரிசியினை ஆசிய நாடுகளில் இருந்து வாங்கி அவற்றை அழகுபடுத்தி 'அமெரிக்கன் அரிசி' என விற்பனை செய்வது போலவே நகரத்தார்களும் கிராமிய கலைகளை வாங்கி அதனைப் பரப்பி வருகின்றனர்.

எனவே வவுனியா நகரசபையும் கலாசார மண்டபத்தினை கலை நிகழ்வுகளுக்கு குறைந்த செலவில் கலைஞர்களுக்கு வழங்கவேண்டும் என்ற வேண்டுகோளொன்றினை நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதனிடம் விடுத்திருந்தேன். அவரும் அதற்கு குறைந்த செலவிலேயே வழங்குவதாக கூறுகின்றார். ஆனால் அதனை சட்டமாக்க வேண்டும்.

இம் மண்டபம் நகரசபை பணத்தில் கட்டப்படவில்லை. எனவே நகரசபை இதனை வைத்து உழைப்பதற்கு பார்க்க கூடாது. தமிழர்களுடைய கலைகளை வளர்ப்பதற்கு களமாக அமைக்க வேண்டும். கூட்டங்களுக்கு எவ்வளவு பணத்தை பெற்றாலும் கலை நிகழ்வுகளுக்கு குறைந்த செலவில் வழங்குங்கள் என கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்தார். (125)

# வீதி விபத்து

யாழ்.பேராலயப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்.பேராலய மத்தியூஸ் வீதியில் இரவு 7.00 மணியளவில் வேகமாக வந்த கன்ரர் வாகனம் எதிரே வந்த ஹயர்ஸ் வாகனம் ஒன்றை மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றவேளை வீதியால் வந்துகொண்டிருந்த முதியவரை மோதித் தள்ளியுள்ளது.

இதில் தர்மலிங்கம் (வயது-58) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (52)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அறப்பிரசங்க நிகழ்வும்

(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் தமரச புத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த கால யுத்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அறப்பிரசங்க நிகழ்வும் கடந்த வாரம் முல்லைத்தீவு தலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்களுக்கு அறப்பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டதுடன், ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னங்களும் கோட்டத்தினரால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், வித்தியாலய முதல்வர் க.திருக்குமரன் ஞான கோட்ட அடியார் கனகசபாபதி கேதீஸ்வரன், ஐயாத்துரை இராமானுஜம், ஆசிரியர் கலைமாமணி குமரநாதன் ஆகியோர் உரையாற்றினர். (11)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் நிரந்தர பொலிஸ் அலுவலகம்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நிரந்தர பொலிஸ் பிரிவு அலுவலகமொன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை வடமாகாண பொலிஸ் மா அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலைக்கு வருகை தந்த ஜனாதிபதியிடம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் 24 மணி நேரமும் இவ் அலுவலகம் செயற்படவுள்ளது.

3 பொலிஸ் உத்தியோகத்தர்கள கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வைத்தியசாலைக்கு வரும் குற்றச் செயல்கள் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளையும் உடனுக்குடன் மேற்கொண்டு அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அடுத்து இவ்வைத்தியசாலையிலேயே இவ்வலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (11)



நெடுந்தீவு முகிலனின் "பயணிகள் கவனத்திற்கு" என்னும் நூல் அறிமுகவிழா நேற்றுப் பகல் 10.30 மணியளவில் யாழ். பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் நூலினை வெளியிட்டு வைப்பதையும், அருகில் நூலாசிரியர் முகிலன் நிற்பதையும் காணலாம். (52)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1285)

**கண்ணெதிரே காணும் ஒவ்வொருவரையும் நம்புவது அபாயகரமானது. அதைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும் அபாயகரமானது.**

**- ஆபிரஹாம் லிங்கன்**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தக்கையின் மீது பல இலட்சம் கண்கள்!

தமிழ் ஊடகங்களும், தமிழ் அரசியல் கட்டுரையாளர்களும், தமிழ்த்தரப்பு ராஜதந்திரிகளாகத் தம்மைக் கருதிக் கொண்டிருப்பவர்களும் இப்போது தமிழ்மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் நம்பிக்கை, "இலங்கையரசுக்கு அழுத்தமளிக்கும் நகர்வுகளில் அமெரிக்கா முழுமூச்சாய் இறங்கியிருக்கிறது. அடுத்து நடக்கப்போவது, இலங்கை அரசு கவிழ்ந்து தமிழ்மக்களுக்கு விடிவு பிறக்கப் போகிறது" என்பதாகும்.

வெளிநாடுகள்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்கப்பால் யோசிக்க எதுவும் ஓடாத இந்த ராஜதந்திரக் கொழுந்துகளுக்கு உடனேயே எழும் கேள்வி, அமெரிக்கா இப்படி இலங்கை அரசை முறுக்க, இந்தியா பார்த்துக் கொண்டிருக்குமா? என்பது. எனவே, அதற்கும் பதிலைச் சேர்த்து, "இந்தியாவையும் இணைத்துக்கொண்டு ஜெனீவா மாநாட்டில் அமெரிக்கா பெரிய அழுத்தம் ஒன்றுக்கு அடுக்கெடுக்கிறது" என்ற தமிழ் ராஜ தந்திரக் கண்டுபிடிப்புகள் ஊடகங்களில் வந்தவண்ணம் உள்ளன.

சரி, இவ்வளவு காலமும் இவர்கள் கண்டாய்ந்து சொல்லிக் கொண்டிருந்த வெளிநாட்டு அடுக்கெடுப்புகள் எல்லாம் என்ன ஆயின என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்ற தைரியத்திலேயே இப்போது இந்த "மனிதஉரிமை மாநாட்டு ஸ்பெஷல் ஆய்வுக் கட்டுரைகள்" வந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இவர்கள் இப்படி இருளான கடலுக்குள் தூண்டிலைப் போட்டுவிட்டு, மிதக்கும் தக்கையை, தாங்கள் மட்டுமல்லாமல் தமிழ்மக்களும் அதிலேயே வைத்த கண் வாங்காமல் இருக்கும்படி சொல்லிப் பார்த்துக்கொண்டிருக்க, இலங்கையரசு கடலுக்குள்ளாகவே தன் ஆதரவு நாடுகளுக்கெல்லாம் ஆட்களை அனுப்பிவிட்டு, ஜனாதிபதி தானும் பாகிஸ்தானுக்குப் பறக்கிறார். வழக்கம்போல சீனா முன்கூட்டியே, இலங்கைக்கெதிரான சர்வதேச அழுத்தத்தை முறியடிக்க ஆதரவைத் தெரிவிப்பதாகச் சொல்லிவிட்டது.

மனிதஉரிமை மாநாட்டிற்குப் பிறகும் தக்கை எந்த அசைவும் இல்லாமல் அப்படியேதான் இருக்குமென்றால், நம் ராஜதந்திரிகள் அதைப்பற்றி எதுவும் சொல்லப் போவதில்லை. அமெரிக்காவுக்குச் சிரியாவும் ஈரானும்தான் முக்கியமாய்ப் போனதென்றால் அதற்கு இவர்கள் என்ன செய்ய முடியும்?

இலங்கை அரசை மிரட்ட இந்தியாவும் ஒத்துழைக்கவில்லை; நோர்வேயும் இல்லை; கனடாவும் இல்லை; அவுஸ்ரேலியாவும் இல்லை; அமெரிக்காவும் சரிவரவில்லை என்றால் நம் ராஜதந்திரிகள் – ஊடகங்கள் என்னதான் செய்ய முடியும்? என்றாலும் சோர்ந்துவிட முடியாது. அடுத்து, செவ்வாய்க் கிரகத்திலிருந்து யாரேனும் வந்து இந்தியாவையும் அமெரிக்காவையும் சேர்த்து இணைத்துக்கொண்டு அடுத்த பிரபஞ்ச மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக மகா அழுத்தம் ஒன்றுக்கு அடுக்கு நடக்கிறது என்று இன்னொரு தக்கையை மிதக்க விட வேண்டியதுதான்!

எங்கள் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு இவர்கள் யாரிடமும் சுயமான எந்தத் திட்டங்களுமில்லை என்பதுதான் இந்த ராஜதந்திர ஆய்வுகளுக்கெல்லாம் காரணம். வெளிநாடுகள் எதையாவது செய்யுந்தானே என்று வெறுமே பார்த்துக் கொண்டிருப்பதற்கப்பால், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கேட்பதற்கும் இவர்களுக்கு எதுவுமில்லை.

பெரும்பாலான தமிழ்த் தலைவர்களும், நமக்கு வழிகாட்டுவதாகக் கூறிக்கொள்ளும் ஊடகங்களும் ஆய்வுக் கட்டுரையாளர்களும் தீர்வு எப்படிக் கிடைக்கும் என்பதற்கு எந்தத் திட்டமும் தெளிவும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். ஒன்று முடியவொன்றை நம்பிக்கையாகக் காட்டி ஏமாறுவதும் ஏமாற்றுவதுமாக, இப்படிக் கண்களை மூடிக்கொண்டு காற்றில் கைகளைத் துழாவியபடி நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்களை நம்பி இன்னும் எவ்வளவு தூரம் இவர்கள் பின்னால் போய்க் கொண்டிருப்பது?

**- ஆசிரியர்**

## இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளருக்கு இலங்கைத் தூதுவர் காரசாரமான கடிதம்

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறும் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொள்ளும் இன்னர்சிற்றி பிரஸின் இணையத் தளத்திற்கு செய்திகளை வழங்கும் மெத்தியூ ரசல் லீக்கு அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையணிக்கு சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பிலேயே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

மெத்தியூ ரசல் லீ இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் பிழையான தகவல்களை வெளியிடுவதாக இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் இருந்து சவேந்திர சில்வாவை, அமெரிக்க நீதிமன்றம் விடுவித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தூதுவரின் இந்த கடிதத்தின் பிரதிகள் ஐக்கிய நாடுகளின் சபையின் செயலாளர் பான் கீ முனுக்கும் அவரின் பேச்சாளர் மாட்டின் நெசக்கிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பாரத லக்ஷ்மனின் மனைவிக்கு ஜனாதிபதி செயலகத்தில் உயர் பதவி

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் தொழிற் சங்க ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் பாரியாரான சுமனா பிரேமச்சந்திரவுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இணைப்புச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமனா பிரேமச்சந்திர பல தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்து கணவரின் மறைவுக்குப் பிறகு தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விளக்கியுள்ளதாகவும், இதனைக் கருத்திற கொண்டு ஜனாதிபதி மேற்படி பதவியை அவருக்கு வழங்க தீர்மானித்ததாகவும் தெரிய வருகிறது.

நீண்ட காலம் ஜனாதிபதியுடன் நெருக்கமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாரத லக்ஷ்மனின் சேவையை கௌரவிக்கும் வகையில், அவரது மனைவிக்கு ஏதாவது பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அரசியல் வாதிகள் பலர் இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பலவத்தை கிராமத்திலுள்ள தோட்டமொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

ஓல்லிமடுவாள் கிராமத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி (வயது - 52) என்பவரது சடலமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் சடலமொன்று காணப்படுவதாக கிராம மக்கள் வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

## எரிபொருள் விலை உயர்வு அரசு மீது கடும் கண்டனம்

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு அரசு மீது பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கின்றது என கூறிக்கொண்டு அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக சுமைகளை ஏற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது குற்றஞ் சாட்டியுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

## பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பிரிவுகள் "அவுட்"

நாட்டின் சகல பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் வெளிவாரி பட்டக் கற்கைநெறி முறைமையை முற்றுமுழுதாக நிறுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஏற்கனவே சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. வெளிவாரிப் பட்டக் கற்கை நெறிகள் உரிய நோக்கங்களைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ள தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் பத்தாயிரம் வெளிவாரிப் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி பாதிக்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

எனவே, வெளிவாரிப் பட்டக் கற்கை நெறிகளை தொடர்ந்தும் நடாத்துவதில் பயனில்லை என அறிவித்துள்ளார்.

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருந்த ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக் கிழமை நாடு திரும்பியுள்ளார்.

## அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள் தடுக்க விழிப்புக்குழுக்கள் வேண்டும்

### வடமராட்சி மக்கள் கோரிக்கை

வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலமாக கொலை அச்சுறுத்தலுடன் இணைந்த திருட்டுச் சம்பவங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் வதிரியில் வீடு ஒன்றில் முன்இரவு வேளையில் வீடு புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த தகப்பனையும் மகளையும் அச்சுறுத்தி தங்க நகையும் பணமும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அதேபோன்று பொலிகண்டிப் பகுதி வீடு ஒன்றில் தகப்பன் சிறு குழந்தையுடன் உறங்கிக் கொண்டிருந்த வேளை நள்ளிரவு வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு இருந்தவர்களை அச்சுறுத்தி பல இலட்சம் பெறுமதியான நகையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேபோன்று பொலிகண்டிப் பகுதியில் மற்றுமொரு வீட்டில் கணவனும் மனைவியும் தொழில் நிமித்தம் அதிகாலை வெளியே செல்வதற்காக வீட்டுக் கதவைத் திறந்த வேளை திடீரென அங்கு வந்த திருடர்கள் போலித் துவக்கு மற்றும் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர்களை இரத்தக் காயங்களுக்கு உட்படுத்தி மனைவி அணிந்திருந்த நகைகளைப் பலவந்தமாக அபகரித்துச் சென்றுள்ளனர்.


அதேவேளை, இன்புருட்டிப் பகுதியில் இரவு வேளை மனைவியும் கணவனும் வீட்டின் உள்ளே இருந்து வெளியே கதவைத் திறந்து வரும் வேளை கதவுப் பக்கமாக ஒளிந்து நின்ற திருடன் சத்தம் போடாதே என்று கத்தியைக் காட்டி மிரட்டி மனைவியின் நகை மற்றும் காசு இருக்கும் இடத்தைக் காண்பிக்குமாறும் கேட்டு அவற்றைத் திருடியதுடன் மனைவி அணிந்திருந்த மோதிரத்தைப் பலவந்தமாகக் கழற்றி அதையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் அல்வாய் பகுதி வீடு ஒன்றில் யாரும் இல்லாத சமயம் பார்த்து நுழைந்த திருடர்கள் வீட்டு நாய்க்கு மயக்க மருந்து போட்டு விட்டு வீட்டிற்கு உள்ளே உள்ள பின் கதவை உடைத்து சென்று மடிக்கணினி உட்பட பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் பல நடைபெற்றதுடன் இதுவரை மேற்படி சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் ஒருசிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் சில சந்தேக நபர்களும் ஒரு சில இடங்களில் கைது செய்யப்பட்டு விடுதலையாகியுள்ளனர் எனவும் வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எதிர்காலத்திலும் இதுபோன்ற களவுகள் இடம்பெறாதிருக்க உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என்று வடமராட்சிப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (116)

# யூனியன் கல்லூரியின் தேவைகள் அபிவிருத்தியூடாக நிறைவேற்றப்படும்

## ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து நிற்கின்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை அபிவிருத்தியினூடாக மெருகூட்டுவோம என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் கல்லூரி அதிபர் க.இரத்தின குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தெல்லிப்பளைப் பிரதேசத்தின் பல்வேறு அடிப்படைத் தேவைகள பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. அவ்வாறே இன்னும் பல குடும்பங்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேறாமல் வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இங்கு கல்வி கற்கின்ற மாணவர்கள் பல்வேறுபட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத ஓர் இக்கட்டான சூழலில் தமது கல்வியைத தொடர வேண்டியுள்ளது. எமது தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இப் பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்து தன்னிடம் தெரியப்படுத்துமாறு எனக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆகவே அமைச்சர் ஊடாக வடக்கின் 1000 கோடி ரூபா அபிவிருத்தித் திட்டத்தில் இப் பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான 'நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கருத்துரைகளை யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மாணவர்களின் பல்வேறு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளுடன் இடைவேளை நிகழ்வாக மாணவிகளின் இசையும் அசைவும் இடம்பெற்றது. வோட், டிக்கன், சிமித், துரைரத்தினம் ஆகிய இல்லங்களுக்கிடையிலான போட்டி நிகழ்வுகளில் துரைரத்தினம் இல்லம் முதலிடத்தைத் தட்டிக்கொண்டது.

இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா, தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதன், தெல்லிப்பளைப் பிரதேச சபை தவிசாளர், நல்லூர் பிரதேச செயலாளர், பாடசாலை அதிபரகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடமராட்சி கல்வி வலயத்துக்கான 3 மாடிக் கட்டடப் பணிகள் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்கான மூன்று மாடிக்கட்டடம் அமைக்கும் பணிகள் என்றிப் திட்டத்தின் கீழ் துரிதகதியில் இடம் பெற்று வருகின்றது.

இக்கட்டடம் அமைக்கும் பணிகளுக்கென முதற்கட்டமாக 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருவதுடன், எதிர்வரும் சித்திரை மாதத்தில் இரண்டு மாடிகளுக்கான வேலைகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 3 ஆம் மாடிக்கான மிகுதி வேலைகள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரின் ஆதரவுடன் இந்த வருடம் கிடைக்குமென்பதுடன், வேலைகள் யாவும் பூர்த்தியடையும் என எதிர்பார்ப்பதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இம்மாடிக்கட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வருடம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் இணைந்து நாட்டியமை குறிப்பிடத்தக்கது. (116)

# பொலிஸாரால் அபராதம்

(புதுக்குடியிருப்பு)

ஒரு வழிப்பாதையில் எதிர்மாறாகப் பயணித்த பலர், வீதியில் நின்ற கண்காணிப்புப் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டு அபராதம் செலுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்வம் நேற்றுமுன்தினம் யாழ்.நகரப் பகுதியில் உள்ள ஒரு வழிப்பாதையாக அமைந்துள்ள கஸ்தூரியார் வீதியில் நிகழ்ந்துள்ளது.

மேற்படி இப்பாதையூடாக மோட்டார் சைக்கிளில் எதிர்மாறாகப் பயணித்த பல பயணிகள் மின்சார நிலை வீதிச் சந்தியில் நின்ற கண்காணிப்புப் பொலிஸாரிடமே அகப்பட்டுக் கொண்டனர்.

இவ்வாறு அகப்பட்டுக் கொண்டவர்கள் அதற்குரிய தண்டப் பணத்தைச் செலுத்திவிட்டுச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (138)

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் நெல்லை கொள்வனவு செய்ய தீர்மானம்

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ப.நோ.கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ வெள்ளைச்சம்பா நெல்லை 30 ரூபாவிற்கும் ஏனைய நெல் வகைகளை 28 ரூபாவிற்கும் கொள்வனவுசெய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் காலபோகநெல்லை கொள்வனவு செய்வது தொடர்பான கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் விவசாயிகள் நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் இருக்கும் நிலைபற்றியும தனிப்பட்ட வியாபாரிகள் தாம் நினைத்த விலைக்குக் கொள்வனவு செய்வதால் பாதிக்கப்படும் விவசாயிகள் பற்றியும் ஆராயப்பட்டது.

இதன்போது நெல்லைக் கொளவனவு செய்வது தொடர்பான விலை விபரம் குறித்து தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கம் தமது இரு மத்திய நிலையங்களான ஜெயபுரத்திலும் பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்திலும் எதிர்வரும் வாரத்தில் நெல் கொள்வனவு செய்யப்படும் எனவும் உடனடியாக விவசாயிகள் பணததைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சங்கத் தலைவர் த.தயாரூபன் தெரிவித்துள்ளார். (112)

# அதிகஷ்டப் பிரதேச ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட வடமராட்சிகிழக்கு அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமது சொந்த இடத்திலுள்ள பாடசாலைகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இடமாற்றப்படவுள்ளனர்.

இதில் அதிகஷ்டப் பிரதேசங்களில் 3 வருடத்தைப் பூர்த்தி செய்த பெண் ஆசிரியைகளும் 4வருடத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களும் இவ்வாறு இடமாற்றப்படவுள்ளனர்.

இதேவேளை இக்கஷ்டப் பிரதேசத்தின் வெற்றிடத்திற்கு கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளா சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (116)

# இந்திய வீட்டுத்திட்டத்தை பெற்றுத் தரவும்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 486 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் இ.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தின் துணுக்காய பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஓரளவு அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், நிரந்தர வீட்டு வசதிகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை ஆயிரத்து 535 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதிகள் தேவையாகவுள்ள நிலையில் இவர்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தினூடாகப் பெற்றுத்தருமாறு இம்மக்களால் கோரப்பட்டுள்ளது.

மேலும் வாழ்வாதார உதவிகள் சில மக்களுக்கே வழங்கப்படடுள்ளதுடன் ஏனைய குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டியுள்ளதாகப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)

# காப்பெற் வீதியாக்க நடவடிக்கை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூர் வீதிக் கிராமத்தின் ஒரு கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்படவுள்ளதாக மன்னார் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் தெரிவித்தார்.

சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ்வீதிக்கான நிதியின் 80 வீதத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கியும், 20 வீதத்தினை இலங்கை அரசாங்கமும் ஒதுக்கியுள்ளது. இதேவேளை, மன்னார் உப்புக்குளம் கிராமத்தின் பிரதான வீதியும காப்பெற் வீதியாக அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# குற்றச் செயல்களைத் தடுக்கும் உரிமை நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு

## கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி


(கிளிநொச்சி)

இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுக்கின்ற உரிமை உள்ளது என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரிவின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி எம்.எல்.ஆப்டீன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-புன்னை நீராவிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் சில முறைப்பாடுகளே பொலிஸ நிலையத்திற்கு கிடைக்கின்றன. சில கிடைப்பதில்லை. இதனால் குற்றச்செயல்களை இனங்கண்டு அவற்றைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பும் கடப்பாடும் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதன் மூலம் தான் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை தொடர்பான பதிவுகள் பிறப்பு, இறப்புப் பதிவுகள் திருமணப்பதிவுகள், வைத்திய சேவைகள் என்பன இடம்பெற்றதுடன் இதன் மூலம் பெருமளவான மக்கள் பயன்பெற்றனர். (கே)



பூநகரி மகா வித்தியாலய மாணவன் எழுதிய இரு வானொலி நாடகங்களைக் கொண்ட நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் மாணவன் தலைமை புரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச செயலர் கே.என்.வசந்தகுமார் வழங்குவதையும் காணலாம். (112)

# சாதனையாளர்களை உருவாக்குவதற்கு முன்பள்ளிகளே அடிப்படைக் காரணியாகும்

## கால்கோள் விழாவில் ஆசிரியர் மகேந்திரன்

(கிளிநொச்சி)

சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கான மனிதர்கள் முன்பள்ளிகளில் இருந்தே உருவாக்கப்படுகின்றனர் என கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி நிர்வாகியும் ஆசிரியருமான சி.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நகரிலுள்ள ஆதவன் முன்பள்ளியின் 2012 ஆம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் காலகோள் விழாவில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது பள்ளியில் கல்வி கற்ற மாணவர்கள் பல் கலைக்கழகம் வரை சென்றுள்ளனர். அத்துடன் இங்கிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் அங்கும் தமது திறமைகளை சிறப்பாக வெளிக்கொணர்ந்து சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

இவர்களின் சாதனை பாடசாலை மட்டத்தையும் கடந்து மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்வது மகிழ்ச்சி அளிக்கின்றது.

இவர்களின் இந்த முன்னேற்றத்திற்கு வித்திட்டவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே. எனவே ஒரு சாதனையாளனின் அடிப்படைக் கல்வி முன்பள்ளியிலேயே ஆரம்பிக்கின்றது.

ஆகவே முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் பங்கையற்செல்வன் கலந்துகொண்டு மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்பள்ளியின் மேற்பிரிவு மாணவர்கள் 150 பேர் கீழ்ப்பிரிவில் உள்வாங்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்று அழைத்துச் செனறனர்.

# பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை 6 மணிக்கு பேருந்து சேவை

(முழங்காவில்)

பூநகரியிலிருந்து அதிகாலை 6 மணிக்குப் புறப்படும் அரச பேருந்து சேவை தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பெருமளமானோர் இதனால் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக இச்சேவை நிறுத்தப்பட்டிருந்த நிலையில் அரச ஊழியர்கள், தனியார் கல்வி நிலையங்களில் படிக்கின்ற மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக வருவோர் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

மேலும் இவர்கள் இச்சேவை இல்லாது படும் கஷ்டங்கள், சிரமங்கள் தொடர்பாகவும் இச்சேவை மீண்டும் ஆரம்பிக்குமாறும் தினமுரசு பத்திரிகையூடாக சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மீண்டும் இச் சேவை ஆரம்பிக்கப்பட்டு அதிகாலை 6.15 மணிக்கு இவ் அரச பேருந்து பூநகரி வாடியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கித் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

இப் பேருந்து யாழ். சாலையில் இருந்து வந்து பூநகரியில் தரித்து நின்று அதிகாலையில் சேவையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (112)

# வீதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகள்

(புதுக்குடியிருப்பு)

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலிருந்து பிரியும் கன்னியர்மட வீதிச்சந்திக்கு அருகாமையில் வீதியோரம் கொட்டப்பட்டு தேங்கிக் கிடக்கும் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரச் சீர்கேடாகவும் இருக்கின்றன. இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுத்து கழிவுகளை அகற்றுமாறு அப்பகுதி வாழ்மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (138)



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் வழங்கப்பட்ட நிதியில் பாடசாலைக்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருவதைக் காணலாம். (77)

# பிரமந்தனாறு கிராமத்தில் பயறு செய்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கென பிரமந்தனாறுக் குளம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் உப உணவுப் பயிரான பயறு உற்பத்திக்கு இக்குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இம்முறை சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்பட்டு பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றுள்ளதுடன், இக்குளம் கடந்த வருடம் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாகப் புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## மந்த கதியில் காபற் இடும் பணி சிரமத்துடன் போக்குவரத்து

தம்பசிட்டி வீதியும், விநாயக முதலியார் வீதியும் காபற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் ஆகியும் இதுவரை பூரணப்படுத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைகள் பூர்த்தியாக்கப்படாமையால் இவ்வீதியூடாகப் பயணம் செய்யும் போது புழுதி மேலெழுந்து அள்ளி வீசப்படுவதால் தாம் சிரமங்களுக்குள்ளாவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வீதியால் வடஇந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயாதரப் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் நாளாந்தம் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வீதிக்கான காபற் இடும் பணிகள் பூர்த்தியாக்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி பணிகளை விரைபுபடுத்துமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (09)


## ஆலய வளர்ச்சிக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை அடைக்கலமாதா கோவில் 2012 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஆலய பங்குத்தந்தை அருட் திரு ஜோதிநாதன் தலைமையில் ஞாயிறு திருப்பலி நிறைவுடன் ஆலய முன்றலில் இப் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

ஒவ்வொரு வலயத்திலிருந்தும் இருவர் என்ற அடிப்படையில் இந்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இந்த அடிப்படையில் 12 பேர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.




பரமர் அரசியல் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதில்லை என்னும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது. அரசியல் என்றால் என்ன? அரச விவகாரங்களைப் பேசுவதா?

அரச சக இயல் அரசியல்! இவ்வரசியல் விஞ்ஞானம், அளவியல், கணக்கியல், வாழ்வியல், சமூகவியல் ஊடாக இலக்கியம் வரை கோலோச்சுகிறது.

கட்சி, தேர்தல் நாடாளுமன்ற அரசியல், இவற்றில் எல்லாருக்கும் ஈடுபாடு இருப்பதில்லை. அதுபோல் எனக்கும் இல்லை என்பது உண்மைதான்.

ஆயினும், தேர்தல் பிரசைகள் எவருமே அரசியல் பிரக்ஞை இல்லாமல் வாழ முடியாதென்பதற்கு அமைவாக எனக்கும் அரசியல் உண்டு.

அதையே நான் பேசிக் கொண்டிருக்கிறேனென்றால் உங்களுக்கு வியப்பாக இருக்குமா?

அரிசி சக இயல் அரிசியல் உலக மக்கள் உணவுத் தேவையின் 90 வீதமான பங்கை அரிசியல் நிறைவேற்றுவதால் அரிசியில் இருந்தும் அரசியல் பிறக்கிறது.

இலங்கையின் அரச நிர்வாகத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலம் புகழ் பெற்ற ஒன்று. 1972 களில் இலங்கையை ஸ்ரீலங்கா மக்கள் குடியரசாக்கிய பெருமை அவருக்குண்டு.

அந்தக் காலத்தில் பிறநாடுகளில் இருந்து எந்தப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படவில்லை. எமது கால்களில் நிற்போம் என்ற அடிப்படையில் உள்ளூர் உற்பத்திகளே மக்களுக்கு வழங்கப்பட்டன.

அதனால் அரிசி, சீனி போன்ற பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. அந்நாட்களில் மூன்று வேளையும் மரவள்ளிக்கிழங்கே மக்களின் உணவாகப் பயன்படுத்தப்பட்டது.

அவ்வேளை அரைசியல் பயன்படுத்தப்பட்டது. அரை சக இயல் அரைசியல். சீனித் தட்டுப்பாடு காரணமாக பங்கீட்டுக் கடைகளில் அளவுப் பிரமாணமே சீனி வழங்கப்பட்டன.

அதனைச் சிலேடையாக 'அரைக்குமேல சீனி இல்லை' என்று கூறப்பட்டதும் நிகழ்ந்தன. அக்கால கட்டங்களில் நாலு, ஐந்து பேர்கள் கூடிக்கதைக்கும்போது பாலியல் சம்பந்தமாகப் பேச்சுக்கள் அடிபட்டால் 'அரைசியல் பேசுவதற்குத் தடை' என்றும் சுவாரஸ்யமாகக் கூறிக் கொள்வார்கள்.

இதனைச் சொல்லும் போதுதான் இன்னொன்றும் ஞாபகத்துக்கு வருகிறது. நம்முன்னோர் பிள்ளைகளுக்கு பெயர்களைக் கூட இந்த அரைசியல் ரீதியில் வைத்துள்ளனர் என்னும் விடயம்.

உதாரணத்திற்கு ஆண்பாலில் விந்தன், அரவிந்தன் என்பதுபோல் பெண்பாலில் சிவகாமசுந்தரி, பூமணி என்னும் பெயர்கள் அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டலாம்.

இவ்விதம் அரசியல், அரைசியல், அரிசியல் என்பது மாபெரும் கடல். அந்தக் கடலில் சின்னக்குட்டி சின்னச்சாமியார் மூழ்கி முத்தெடுத்து வழங்கிக் கொண்டிருப்பதும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

தமிழருக்கு அரசியல் தீர்வொன்றைக் கூட்டமைப்பினர் முன்வைத்து ஏறத்தாழ முன்னையதைவிட இப்போ பதினெட்டு சுற்றுக்கும் மேலாகப் பேசி வருகின்றனர்.

அரசியல் எண்டால் இதுதான். தானும் வாழ வேணும். மற்றவையும் வாழ வேணும். பிரச்சினை ஒண்டிருந்தால்தானே அடுத்த முறையும் நாடாளுமன்றப் படிகளை மிதிக்கலாம். இப்ப விளங்குதே அரசியல் என்னெண்டு.

# முரசின் இன்றைய பலன்

(13.02.2012 -திங்கட்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 1 ஆம் திகதி. ஷஷ்டி மாலை 5.06 வரை. நட்சத்திரம் சித்திரை காலை 7.58 வரை. சுவாதி சித்தாமிர்தம் பின் இரவு 6.19 வரை. இராகுகாலம் 8. 04 - 9.34 வரை. சுபநேரம் 12.34 -2.04 வரை. எமகண்டம் 11.04 - 12.34 வரை குளிகைகாலம் 2.04- 3.34 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | நண்பரால் தொல்லை, இலட்சுமிகரம், பகை வெல்லும், சாதனை புரிவீர். |
| ரிஷபம:- | அந்நியர் உதவி, கோடீஸ்வர யோகம், தெய்வ வழிபாடு, கல்வியில் முன்னேற்றம். |
| மிதுனம் :- | காரிய சித்தி, பணவரவில் திருப்தி, பொன் பொருள் சேரும், எதிர்பாரா இலாபம். |
| கடகம் :- | சுபகாரியம், உடல் ஆரோக்கியம், வெளிவட்டார உதவி, பண வசதி. |
| சிம்மம் :- | நல்லதகவல், சாதனைகள் புரிவீர், குடும்பத்தில் மகிழ்ச்சி, கடின உழைப்பு. |
| கன்னி :- | காரிய மேன்மை, நலக் குறைவு, தொழில் ரீதியான பயணம், செல்வாக்கு உயரும். |
| துலாம் :- | பகட்டு வாழ்க்கை, மனச் சஞ்சலம், குடும்பத்தில் சுமுக உறவு, காரிய சித்தி. |
| விருச்சிகம்- | வாகன சுகம், இருப்பிட திருப்தி, திருமணம் கைகூடும், போட்டி பொறாமை. |
| தனுசு:- | அதிக இலாபம், வேலை வாய்ப்பு, உடல் உபாதை, கடவுள் வழிபாடு. |
| மகரம :- | புது முயற்சி, இருப்பிட திருப்தி, புத்திரரால் நன்மை, சொத்துக்களில் திருப்தி. |
| கும்பம் :- | மனதில் தெளிவு, திருமணம் கைகூடும், குடும்ப அனுசரணை, செல்வாக்கு. |
| மீனம் :- | பயணம் தவிர்க்கவும், வைத்தியச் செலவு, நண்பர்கள் உதவி, சுபகாரியம். |

# வெளியுலக நிகழ்ச்சிநிரலுக்கு இழுபட்டு...

இந்தியா உட்பட அமெரிக்கா, மேற்குலகம் என்பவற்றிற்கு போர்க் குற்ற விவகாரங்களுக்காக இலங்கை யைத் தண்டிக்கும் எண்ணம் பெரி தாக இல்லை. அவ்வாறு இருந்திருந் தால் சிரியா தொடர்பாக எடுத்து வரும் நடவடிக்கைகளின் அளவிற்கா வது அமெரிக்கா முன்னேறியிருக்கும். சிரியாவினை என்ன விலை கொடுத்தாவது ரஷ்யாவும் சீனாவும் பாதுகாக்கும் என்பது அமெரிக்கா விற்கு தெரிந்த ஒன்றுதான்.



ஆனாலும் ஐ.நா பாதுகாப்புச் சபையில் அதுதொடர்பான தீர்மானத் தைக் கொண்டு வந்தது. இவ்வளவிற் கும் வன்னியில் இறந்த மக்களோடு ஒப்பிடும்போது சிரியாவில் இறந்த மக்களின் தொகை பத்தில் ஒன்றுகூட இல்லை. சிரிய விவகாரத்தில் இந்த தடவை இந்தியா மேற்குலகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டிருக் கின்றது. இது மேற்குலக அணியில் இந்தியா நிரந்தரமாக இணைந்து விட்டதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இந்தியா உட்பட மேற்குலகத்திற்கு அதன் முழு இலக்குமே சீனாவிடமி ருந்து இலங்கையைக் கழற்றுவது தான். தற்போதைய சூழலில் இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலமே இதனை மேற்கொள்ள முடியும். ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வருவதற்கு இலங்கையில் அதிகாரச் சமநிலை மாற்றமடைய வேண்டும்.

தற்போது அதிகாரச் சமநிலை மகிந்தருக்கு சார்பாக அதி உச்ச வகையில் உயர்ந்திருக்கின்றது. தமிழ் அரசியலுக்கு சிறிய வகை வெற்றி களையாவது கொண்டுவராமல் இவ் அதிகாரச் சமநிலையில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது. இதனால் தான் குறைந்தபட்சம் வடக்கு மாகாண சபைத் தேர்தலையாவது நடாத்த வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கின்றது.

காலதாமதம் இலங்கையின் மீதான சீனாவின் பிடியை மேலும் உறுதிப் படுத்தும் என்பதால் அமெரிக்கா அவசரம் காட்டுகின்றது. இலங்கைக் கான அமெரிக்க தூதுவரினால் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட கடிதம், கிலாரி கிளின்டனின் அமெரிக்க அழைப்பு, பிளேக்கின் இலங்கை வருகை, சொல்கேய்மின் இந்திய விஜயம், ஜெனிவாவிற்கு கூட்டமைப்பை அழைத்தல் என்பனவெல்லாம் இந்த அவசரத்தின் விளைவுகளே.....

இந்திய - சீன அதிகாரச் சமநிலை, சீன - அமெரிக்க அதிகாரச் சமநிலை என்பவற்றில் மியன்மாரில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தாக்கங்களைச் செலுத்தியிருந்தாலும் இலங்கையில் ஏற்படும் மாற்றங்களும் அதற்கு அவசியம்.

மறுபக்கத்தில் இலங்கை அரசும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வியூகங்களை அமைத்து செயற்படத் தொடங்கியுள்ளது. இந்தச் செயற் பாட்டில் அதன் முதலாவது வியூகம் இந்தியாவைக் கைக்குள் போடுவது தான். இலங்கையில் சீனாவுடன் பொருளாதாரப் போட்டி இருப்பதால் இந்திய முதலீடுகளுக்கு இடம்கொடுப பதன் மூலமும், பாதுகாப்பு ஒத்துழைப புகளை மேற்கொள்வதன் மூலமும் அதனைச் செயற்படுத்த அரசு முயற்சிக்கின்றது.

இந்தியாவைக் கொண்டே இலங் கையில் சுமுக நிலை நிலவுகின்றது. இணக்க அரசியலை நோக்கி இலங்கை முன்னேறிச் செல்கின்றது எனச் சொல்லவும் வைத்தது. கிருஷ்ணாவும், அப்துல் கலாமும் இலங்கையின் விருப்பங்களை சிறப்பாகவே செய்து முடித்துச் சென்றுள்ளனர்.

இந்த முதலாவது வியூகத்தின் இன்னோர் அம்சம் இந்தியாவைக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பையும் கைக்குள் போடுவது. கூட்டமைப்பு இந்தியாவின் செல்வாக் கில் இருப்பதனால் சற்று தாமதமா னாலும் அரசிற்கு அதில் வெற்றி கிடைத்து வருகின்றது போலவே தெரிகின்றது. சம்பந்தன் - ஜனாதிபதி இரகசியச் சந்திப்பு இந்த அடிப்படை யிலேயே இடம்பெற்றுள்ளது. இந்தியாவின் அழுத்தத்தினால் தெரிவுக்குழுவிற்கு பெயர்கள் கொடுக்க கூட்டமைப்பு முடிவெடுத்துள ளதாகவே செய்திகள் வருகின்றன.

அதேவேளை இந்தியாவைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை கைக்குள் போடுவதிலும் அரசு வெற்றியீட்டுள்ளது. ரணில் விக்கிரம சிங்காவை டில்லிக்கு அழைத்த இந்தியா தெரிவுக்குழுவிற்கு செல்லும்படி ஆலோசனை கூறியுள் ளது. ரணிலும் கூட்டமைப்பும் கலந்து கொண்டால் தாம் கலந்து கொள்வ தில் ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்திருக்கின்றது.

தெரிவுக்குழு செயற்படத் தொடங் கினால் இலங்கைக்கு மேலும் ஒரு வருடம் இழுத்தடிப்பதற்கு கால அவகாசம் கிடைக்கும். இந்தியா அதனைக் காட்டியே ஐ.நா மனித உரிமைக் கவுன்சிலில் இலங்கை தொடர்பான அழுத்தங்களை குறைக்கச் செய்யும். இந்தியாவைக் கைக்குள் போடுவது என்பது அரசாங்கத்திற்கு ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்துவதற்கு சமன். இந்தியா விழுந்தால் கூட்ட மைப்பு விழும், ஐக்கியதேசியக்கட்சி விழும், அமெரிக்கா விழும், மேற்குலகம் விழும்....,

இந்தியா தன்னால் முடியாததை அமெரிக்காவைக் கொண்டு செய்விக் கின்றது என்ற தகவலிலும் உண்மை கள் இல்லாமல் இல்லை. அமெரிக்கா நெருக்க நெருக்க இந்தியாவிடம் ஓடுவதைவிட இலங்கைக்கு வேறு தெரிவு இல்லை. அதுவும் இந்தியா விற்கு சாதகமானதுதான். ஆனாலும் ஒரு எல்லைக்கு மேல் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தலையிடு வதற்கு இந்தியா அனுமதிக்கும் எனக் கூறமுடியாது.

ஆனால் இங்குள்ள பிரச்சினை இந்தியா பொறுமை காப்பது போல அமெரிக்காவினால் பொறுமை காக்கமுடியாது என்பதுதான். சீன விவகாரத்திற்கு அப்பால் ஈரானில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் அமெரிக்காவிற்கு அவ்விவ காரத்தில் கூட இலங்கையை கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கவேண்டிய தேவை உள்ளது. பிளேக்கின் இலங்கை விஜயத்தின்போது ஈரான் விவகாரமும் பேசப்படக்கூடும். இலங்கை தனது 94 வீதமான எரிபொருள் தேவைக்கு ஈரானையே நம்பியிருக்கின்றது...

இந்தியாவின் வியூகம் எல்லோருக் கும் தெரிந்ததுதான். இலங்கையைப் பாதுகாத்தல், தமிழ்த் தேசிய அரசியலை வளரவிடாது தடுத்தல், அமெரிக்காவைக் கொண்டு மென்மை யான அழுத்தங்களை கொடுத்தல் என்பவைதான் அவை. இலங்கைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டிருக் கின்ற நிலையில் கூட அதற்கு ஆறுதலான சூழல் இதுதான். இந்தி யாவின் இந்த அணுகுமுறை இருக்கும வரை கத்தி தலையில் தொங்கிக் கொண்டிருக்குமே தவிர ஒருபோதும் தலையில் விழுந்து விடாது.

இங்கு மிகவும் கவலைக்குரிய விடயம் எந்தவித வியூகங்களும் இல்லாமல் ஒரு தரப்பு இருக்கின்றது என்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் அந்த தரப்பு. தனக்கென தனியான ஒரு இலக்கோ, கொள்கையோ, வேலைத்திட்டமோ, அமைப்பு வடிவமோ இல்லாத ஒரு குழுவிடம் வியூகங்களை எப்படித்தான் எதிர்பார்க்க முடியும்.

இந்தியாவின் நிகழ்ச்சிநிரலுக்கு பின்னால் இழுபட்டுச் செல்வதைத் தவிர கூட்டமைப்பிடம் வேறு எதுவும் இல்லை. இந்தியாவின் கக்கத்தில் இருந்து சம்பந்தன் ஒருபோதும் இறங்கப் போவதில்லை. இந்தியாவும் இறங்கவிடப் போவதில்லை.

ஜெனிவாப் போர்க்களம் இந்தத்தடவையும் புஸ்வாணம் ஆகிவிட்டால் ஆச்சரியம் பெரிதாக இருக்கப்போவதில்லை.

**-முத்துக்குமார் கட்டுரையிலிருந்து.**

# உடற்பயிற்சி இன்றியே கட்டுடல்!


உடற்பயிற்சியும் உணவுக்கட்டுப்பாடும் இல்லாமல் உடலமைப்பைப் பேண முடியுமா என்றால் முடியாது. அமெரிக்க ஆய்வாளர் புரூஸ் ஸ்பீகெல் மேன் தலைமையிலான ஆய்வாளர்கள் கண்டுபிடித் திருக்கும் இயற்கை ஹோமோன் ஒன்று உடற்பயிற்சி போலவே செயற்பட்டு கெட்ட கொழுப்பினை நல்ல கொழுப்பாக மாற்றுகிறது என்பதுதான் ஆய்வுலகின் சமீபத்திய தகவல்.

இந்த ஹோமோனுக்கு 'ஐரிசின்' என்று பெயரிட்டி ருக்கிறார் ஸ்பீகெல்மேன், மனிதர்கள் கடவுளுடன் தொடர்புகொள்ள அனுமதி கொடுத்த கிரேக்க பெண் தெய்வத்தின் பெயர் ஐரிஸ். அதுபோல உடற்பயிற்சி யானது உடலின் பல திசுக்களுடன் தொடர்பு கொள்ள இந்த ஹோமோன் உதவுவதால் இதற்கு ஐரிசின் என்று பெயர் வைக்கப்பட்டது என்கிறார்.

ஐரிசின், எலிகள் மற்றும் மனிதர்களின் உடலில் இயற்கையாகவே உற்பத்தி ஆகிறது. இது, உடலின் செலவிடப்படாத சக்தியைச் சேமிக்கும் சிறு உருண்டை களால் ஆன வெள்ளைக் கொழுப்பினை, வெப்பத்தை உண்டாக்கும் கோப்பி கொழுப்பாக மாற்றுமாறு உயிர ணுக்களை தூண்டுகிறது என்று கண்டறியப்பட்டுள் ளது. உடற்பயிற்சியினால் தசை திசுக்களில் ஏற்படும் மாற்றங்களான கலோரிகள் எரிக்கப்படுவது, மேம்படுத் தப்பட்ட இன்சுலின் உற்பத்தி மற்றும் உடல் உறுதி பெறுவது ஆகிய பல மாற்றங்கள் ஐரிசின் செயற் பாட்டினாலும் ஏற்படுகின்றன. இதனால் உணவுகளால் ஏற்படும் உடல் பருமன் மற்றும் நீரிழிவு ஆகிய நோய்களிலிருந்து உடலும் பாதுகாக்கப்படுகிறது.

இது தவிர, உடற்பயிற்சியானது நரம்பு, தசைப் பகுதிகளுக்கு பலனளிக்கக்கூடியது. அது போல ஐரிசி னும் பலனளிக்கும் பட்சத்தில், தசை நோய்களுக்கும் ஐரிசின் கொண்டு சிகிச்சை அளிக்க முடியும் என்கிறார் ஸ்பீகெல்மேன்.

ஆனால், ஸ்பீகெல்மேன் நினைப்பது போல இந்த ஐரிசினை உடற்பயிற்சி மாத்திரையாக மாற்றுவது




அவ்வளவு சுலபமான காரியமல்ல என்கிறார் அமெரிக் காவின் எம்.ஐ.டி. ஆய்வு மையத்தின் உயிரியல் துறை பேராசிரியர் ஹார்வீ லோடிஷ். ஏனென்றால், 1990 களில் தான் கண்டுபிடித்த 'அடிப்போனெக்டின்' என்னும் ஹோமோனை மாத்திரையாக தயாரிக்க முயன்று இறுதியில் தோல்வியையே சந்தித்ததாக கூறுகிறார் லோடிஷ். அடிப்போனெக்டினும் ஐரிசினை போன்ற ஹோமோன் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம், ஐரிசினை உற்பத்தி செய்வது மிகவும் சுலபம், அதனால் ஜீன் தெரபி போன்ற முறைகள் மூலமாக ஐரிசினை கொண்டு சிகிச்சை அளிக்க முடியும் என்கிறார் பேராசிரியர் லோடிஷ்.

மொத்தத்தில் உடல் பருமன், நீரிழிவு மற்றும் நரம்பு, தசை நோய்கள் மற்றும் தசை விரயமாதல் உள்ளிட்ட பல நோய்களுக்கு ஐரிசின் கொண்டு சிகிச்சை அளிக்க முடியும் என்று நம்பிக்கை அளிக்கிறார் ஸ்பீகெல்மேன்!

# மனித நேயம்!

ஓர்
இளைஞனின்
குடிசை வாசலுக்கு
குளிரில்
நடுங்கிக்கொண்டே
வந்த வயதான
முதியவர்
இளைஞனை,
பார்த்து, "இன்று
இரவு மட்டும் நான்
உன் குடிசையில்
தங்கிக்கொள்ளலாமா?"
என்று கேட்டார்.
உடனே
இளைஞன்,
"நீங்கள் கடவுளை
நம்புகிறீர்களா?"
என்று கேட்டான்.
அதற்கு
முதியவர்,
"இல்லை. நான்
இயற்கையை
மட்டுமே
வணங்குபவன்"
என்றார்.
"அப்படியென்றால்
முதலில் வெளியே
போ" என்று
முதியவரை
விரட்டிய
இளைஞன்
குடிசையை
மூடிவிட்டு,
படுத்தான்.
அவன் கனவில்
கடவுள் தோன்றி,
"80 ஆண்டுகளாக
என்னை நம்பாத
ஒருவனை நான்
வாழவைக்கும்போது,
நீ ஓர் இரவு தங்க
வைக்கக்கூடாதா?"
என்று கேட்டாராம்.
மனிதநேயம்தான்
சிறந்த மதம் என்று
அந்த இளைஞன்
புரிந்துகொண்டான்.



# என்ன ஆனார்கள் இவர்கள்? 2

விஜயகாந்துக்கும் எஸ்.ஏ. சந்திர சேகரனுக்கும் வெளிச்சம் தந்த படம் "சட்டம் ஒரு இருட்டறை". தயாரித்தவர் வடலூரான் கம்பைன்ஸ் சிதம்பரம். "சாதிக்கொரு நீதி", "நீறு பூத்த நெருப்பு" என்று சமூகநீதி பேசிய அவருடைய படங்கள சமுதாயத்தில் வாழ நிதி தர வில்லை.



தொழிற்சங்கத் தலைவராக இருந்த அவர், தாம் தலைவராக இருந்த தொழிலாளிகளின் நலனுக்காக ஒரு திரைப்படம் எடுக்க விரும்பினார்.

நிறையப் பேரை சினிமாவுக்கு அறிமுகப்படுத்தியிருந்தாலும் படம் எடுப்பதற்கு அவர்கள் தயவுமட்டும் போதாதே... பணம் வேண்டுமே.. கடைசி வரை அந்த ஆசை நிறைவேறவே இல்லை.

"பயணங்கள் முடிவதில்லை" திரைப் படம் ஒரு மியூசிக்கல் ஹிட் தந்த படம். நடிகர் மோகன் தன் கையில் மைக் வைத்திருந்தாலே போதும் படம் நூறுநாட்கள் ஓடும் என்று பேச வைத்தது. கோவைத் தம்பி தயாரித்த அந்தப் படம் அதுவரை இசையமைப்பாளர்கள் என்றால் போஸ்டரின் கடைசியில் டைரக்டர் பெயருக்குக் கீழே இடம் பெற்றுவந்த சிஸ்டத்தை



மாற்றி போஸ்டரே இசையமைப்பாளர் தான் என இளையராஜாவை முன்னிலைப படுத்தும் வழக்கத்தை ஏற்படுத்தியது.

"இளமைக் காலங்கள்", "நான்பாடும் பாடல்", "இதயக்கோயில்" போன்றவை ஆர்.சுந்தர்ராஜன், மணிவண்ணன் போன்றவர்களோடு மணிரத்னத்தையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

"ஆயிரம் பூக்கள் மலரட்டும்", "மண்ணுக்குள் வைரம்" போன்ற படங்களுக்குப் பிறகு திரைப்படங்கள் அவருக்கு இலாபத்தைத் தரவில்லை. மீண்டும் அவருடைய பழைய அரசியல் வாழ்க்கை தான் அவருக்கு ஆதரவாக அமைந்தது.

தங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட டெக்னீஷியன்கள் பிரபலமாக இருப்பதும் படத்தைத் தயாரித்த அவர்கள் காணாமல் போவதும் சினிமா சரித்திரத்தில் தொன்று தொட்டு இருக்கும் சாபக்கேடு தான்.

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம் 19

**ஐந்தாம் படை யார்?**

கமுக்கமாகச் (இரகசியமாக) செயற்பட்டு வஞ்சகம் செய்வதை ஐந்தாம்படை வேலை செய்துவிட்டான் என்று சொல்லி வருகிறோம். எப்படி வந்தது இது? பழைய மன்னர்களின் படை நான்கு. அவை: தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை. (இந்நாளில் வான்படை, கடற்படை, தரைப்படை என மூன்றே) மேற்சொன்ன நான்கு படைகளும் நேரடியாக எதிர்ப்பட்டுத் தாக்கும். இப்படி நேர்முகமாகத் தாக்காமல் மறைமுகமாக வேலை செய்பவர்கள் (அரசியலில்) ஐந்தாம் படை என இழிவாகக் குறிக்கப்படுகிறார்கள்.

**நூத்தி முப்பத்தி மூணு – நூற்று முப்பத்து மூன்று**

நூற்று முப்பத்து மூன்று என்று சரியாகச் சொல்ல வேண்டியதை இப்படி "நூத்தி முப்பத்தி மூணு" என்று பேசுகிறோம், சிலசமயம் எழுதவும் செய்கிறோம். நூற்று - முப்பத்து - மூன்று என இலக்கணமாகச் சொல்லாது போயினும் நூற்று முப்பத்து என்று "உ" வை "இ" ஆக்காமல் முப்பத்து மூணு என்றாவது சொல்லலாம், எழுதும்போது நூற்று முப்பத்து மூன்று என்றே எழுத வேண்டும்.

# விட்னி ஹூஸ்டன் காலமானார்!

அமெரிக்காவின் பிரபல பொப் இசையின் சூப்பர் ஸ்டார் என அழைக்கப்படும் பாடகி விட்னி எலிசபெத் ஹூஸ்டன் நேற்று காலமானார். அவருக்கு வயது 48.

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் 1963 இல் பிறந்தவர் விட்னி ஹூஸ்டன். அவரது தாய் கிறிஸ்தவ தேவாலயங்களில் பாடல்கள் பாடுபவர். விட்னி ஹூஸ்டனும் தேவாலயங்களில் பாடியே தனது வாழ்க்கையை தொடங்கினார். பின்பு அவர் நியூயோர்க் நகர இரவு விடுதிகளில் பாடகியாக பிரபலமாகத் தொடங்கினார். இவ்வாறான விடுதி ஒன்றில்தான் பிரபல இசையமைப்பாளர் கிளைவ் டேவிஸ், ஹூஸ்டனை முதன்முதலில் பார்த்தார்.

விட்னியின் முதல் அல்பமான "விட்னி ஹூஸ்டன்" 1985ஆம் ஆண்டு வெளியானது. பெரும் வெற்றி பெற்ற பெண் பாடகி ஒருவரின் முதல் அல்பம் என்ற பெருமையை பெற்றது. அவரது இரண்டாவது அல்பம் "ஒய்ட்னி" 1987ஆம் ஆண்டு வெளியாகி மீண்டும் ஒரு சாதனையை படைத்தது. கின்னஸ் சாதனைகளின்படி, விட்னி மிக அதிகமான விருதுகளை வாங்கிய பெண்மணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். அவர் இதுவரை 2 எமி, 6 கிராமி, 30 பில்போர்ட் மியூசிக், 22 அமெரிக்கன் மியூசிக் உள்ளிட்ட 415 விருதுகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தனது துடிப்பான பாடல்கள் மூலம் மக்களை கிறங்க வைத்த விட்னியின் புகழ் அவர் போதைப்பழக்கத்திற்கு ஆளாக ஆரம்பித்ததும் மங்கத்துவங்கியது. பின்பு அவர் மற்றொரு பொப் பாடகரான பொபி பிரவுனை திருமணம் செய்து கொண்டார்.

திரைப்படங்களில் 1992ஆம் ஆண்டு The Bodyguard மூலம் அறிமுகமானார். கதாநாயகனாக கெவின் கோஸ்ட்னர் நடித்திருந்தார். இப்படத்தில் வரும் ஐ will always love you என்ற பாடல், இசை உலகின் பெண் பாடகர் ஒருவரின் மிக அதிகமாக விற்பனையான பாடல் என பெயரை விட்னிக்கு பெற்றுத் தந்தது. 2000 ஆம் ஆண்டு மட்டும், ஹூஸ்டன் 6 கிராமி விருதுகளை பெற்றார்.

# ஆறுபடை அல்ல ஆற்றுப்படை!

-ஞானச்செல்வன்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு தலங்கள் முருகக் கடவுளுடையவை. இந்த ஆறும் படைவீடுகள் அல்ல. "ஆறுபடை வீடு" என்று பேசுவதெல்லாம் பொருளறியாது மக்கள் வழக்கில் வந்து கலந்தனவே.

படைவீடு என்றால் பாசறை. மன்னர்கள் பகை நாட்டின் மீது படை எடுத்துச் செல்லுங்கால் இடையில் இளைப்பாற அமைக்கப்படுவதே படை வீடு அல்லது பாசறை. இப்போதைய வழக்குத் தமிழில் "முகாம்" என்றும் சொல்லலாம்.

அந்த வகையில், முருகப் பெருமான் சூரனை அழித்திடப் போருக்குப் புறப்பட்டபோது, திருச்செந்தூரில் படை வீடு அமைத்ததாகக் கந்தபுராணம் சொல்லுகிறது. மற்ற தலங்களுக்கும் படை வீட்டுக்கும் தொடர்பு இல்லை.

ஆற்றுப்படை என்னும் சொல்லின் பொருளறியாது, படை என்பதைப் படை வீடாக்கி ஆற்றுதலை "ஆறு" என எண்ணாக்கி ஆறுபடை வீடுகள் என்று சொல்லி வருகிறோம். குன்றுதோராடல் என்று அவற்றுள் ஒன்று. எல்லாக் குன்றுகளிலும் (மலைகளிலும்) முருகன் எழுந்தருள் ஆடல் புரிவதே அதன் பொருள். திருத்தணிகை என்பது நாமாகக் கற்பிதம் செய்து கொள்ளுவதேயாம். அவ்வாறே திருவேரகம், சாமிமலையைக் குறிப்பதாகச் சொல்லுவதும் நம் விருப்பினால் ஆனதேயாம்.

சாமி மலைக் கோவில் கட்டுமலை. அதாவது இயற்கையாய் அமைந்த மலையன்று. மனிதர்கள் கற்களை அடுக்கிக் கட்டிய மலை. பல்லவர் காலத்திலிருந்தே (நான்காம் நூற்றாண்டின் பின்) கற்கோவில்கள் தமிழகத்தில் எழுப்பப்பட்டன. சங்க நூல்களில் மிகவும் பழமை வாய்ந்தது திருமுருகாற்றுப்படை என்பதை அதன் நடை கொண்டறியலாம். ஆதலின் அப்போது (முதல் நூற்றாண்டில்) கட்டுமலை இருந்திருக்குமா என்பது ஐயமே.

## ஓக் மரமும், கள்ளிச் செடியும்!



அமெரிக்க ஜனாதிபதி கார்பீல்ட், பதவிக்கு வருவதற்கு முன் கல்லூரி ஒன்றின் தலைவராக இருந்தார். அப்போது ஒருவர் தன்னுடைய மகனைக் கல்லூரியில் சேர்ப்பதற்காக வந்தார். "என் மகன் சீக்கிரமாக படிப்பை முடிக்க ஏதாவது செய்ய முடியுமா?" என்று அந்தத் தந்தை கேட்டார். அதற்கு கார்பீல்ட், "முடியும். ஆனால் நீங்கள் அவன் என்னவாக வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதைப் பொறுத்ததாகும். ஓக் மரத்தை உண்டாக்க நூறு ஆண்டும், கள்ளிச் செடியை உண்டாக்க இரண்டு மாதமும் ஆகிறது கடவுளுக்கே" என்று பதிலளித்தார்.

## தோழர் ஹிட்லர்

வருக தோழர் ஹிட்லர்
வருக வருக. இது உங்கள் வீடு,
எல்லா வீடுகளும் உங்களுடையதுதான்.

தோழர் ஹிட்லர் அன்புகூர்ந்து
கொஞ்சம் தேனீர் அருந்துங்கள்.

வரவேற்பதில் பெருமையடைகிறேன்.
எல்லோராலும்
தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட
ஒரு மனிதரை,
இந்த நூற்றாண்டின்
மிகச் சரியான மனிதரை...

வரலாறு
நீங்கள் தற்கொலை
செய்துகொண்டதாக குறிப்பிடுகிறது.

அது எப்போதும்
இத்தகைய பொய்களையே
உருவாக்குகிறது.

மற்றவர்களைப் போல
நானும் அதை நம்பியிருந்தால்
இப்போது உங்களை அடையாளம் காண
முடியாமல் போயிருக்கும்.

உங்கள் பெயர் மாறலாம்
உருவம் மாறலாம்
ஆனால் நீங்கள் நீங்கள்தான்.

எத்தனையோ காலத்துப் போராட்டம்.
உங்களை யாரும்
அழிக்க முடியவில்லை.

நீங்கள்
அதிகமான அபவாதத்திற்கு
ஆளாகி விட்டீர்கள்.
எல்லாக் குற்றங்களையும்
தனியொருவன் தலையில்
சுமத்திவிடுவது நியாயமில்லாதது.

நீங்கள் பிறரது அடிபணிதலை
விரும்பினீர்கள் அது குற்றமா?
இங்கு
மற்றெல்லோரும் விரும்புவது
இதைத் தவிர வேறென்ன?

யாரையாவது
அதட்ட முடியாத மனிதன்
தற்கொலை செய்துகொள்கிறான்.
அல்லது பைத்தியம் பிடித்துவிடுகிறது.

தோழர் ஹிட்லர்
இலட்சக்கணக்கான யூதர்களை
படுகொலை செய்தீர்கள்.
நீங்கள் ஏதோ கொடியவனாய்
இருந்ததால் அல்ல.

துரதிர்ஷ்டவசமாக
உங்கள் கையில் ஒரு
பெரிய கத்தி கிடைத்துவிட்டது.
அது உங்களுடைய தவறன்று.
என்னிடம் இருக்கும் குண்டூசியினால்
நான் என்ன செய்யமுடியுமோ
அதைச் செய்துகொண்டுதானிருக்கிறேன்.

உங்களுக்கு உலகம் முழுவதும்
தேவைப்பட்டது.
சந்தேகமில்லாமல்
இங்கே ஒவ்வொருவருக்கும்
அவ்வாறே தேவைப்படுகிறது.
ஆனால் உங்கள் பெயர்
வெளியே வந்துவிட்டது.

இன்றைய விலைவாசியில்
கொஞ்சம் அதிகாரத்தை
வாங்க முடியுமானால்
நான் என்னை
வந்த விலைக்கு விற்றுவிடுவேன்.
அது ஒரு டீஸ்பூன் உள்ளே போனாலும்
யாரை என்ன செய்வேனென்று
எனக்குத் தெரியாது
அடுத்தவர்களுக்கும் தெரியாது.

மற்றவர்களுக்காக தான் முடிவெடுக்கும்
பெருந்தினவுக் கொள்ளைநோய்
எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது.
சீழ் வைத்துப் புண்ணாகி
வலியால் தெறிக்கின்றன நம் உறவுகள்.
ஒவ்வொரு இலட்சியமும்
அப் புண்ணையே நக்கி வாழ்கின்றன.

தலைவர்கள், தொண்டர்கள், கணவர்கள்,
ஆசிரியர்கள், அதிகாரிகள், பியோன்கள்,
மருத்துவர்கள், கலைஞர்கள்
தெய்வங்கள், மனித தெய்வங்கள்...

நாங்கள் அனைவரும் விரும்புவது
தோழர் ஹிட்லர்
நீங்கள் விரும்பியதைத்தான்.
நாங்கள் அனைவரும் செய்வது
நீங்கள் செய்ததைத்தான்.


நீங்கள் கனவு கண்ட
வாழ்க்கை முறையை, சாம்ராஜ்ஜியத்தை
பெருமளவுக்கு உருவாக்கிவிட்டோம்.

இனி என்றும் எம்மோடு இரும்.
எம்மை வழிநடத்திச் செல்லும்.
உமது பரிசுத்த ஆவி
உம் பிள்ளைகள் மீது
பூரணமாய் கவியட்டும்.



- மனுஷ்யபுத்திரன்

# "செனட்சபை" வடிவில் நிர்வாக முறைமை; சர்வதேச அளவில் ஆய்வுக்கு ஏற்பாடு




(கொழும்பு)

செனட்சபை முறையிலான அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய நிர்வாக முறைமை தொடர்பான ஆய்வு ஒன்றை நடாத துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக செனட் சபை முறையைக் கொண்டிருக்கும் நாடுகள் தொடர்பாக விபரங்கள் திரட்டப்பட்டு அந்த முறைமை தொடர்பாக விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக அரசின் சிரேஷ்ட இராஜதந்திரிகள் சிலர, குறிப்பிட்ட நாடுகளுக குச் சென்று இந்த விடயம் குறித்து நேரடியாக ஆராயவுள்ளனர்.


செனட்சபை அமுலில் உள்ள நாடுகளின் அரசியலமைப்பு குறித்து ஆய்வு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீரவு வழங்கும் வகையில் செனட் சபையை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

அந்தவகையில், செனட் சபை உருவாக்குவதற்கு முனனதாக அந்த கட்டமைப்பு தொடர்பில் ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, செனட்சபை அமுலில் உள்ள நாடுகளின் அரசியலமைப்பு குறித்து அரசாங்கத்தின் முக்கியஸதர்கள் ஆய்வு செய்ய உள்ளனர்.

செனட் சபை உருவாக்குவது குறித்து ஆளும் கட்சிக்குள் சில கருத்து முரண்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், சரியான ஓர் செனட் சபை திட்டமொன்றை முன்வைப்பதற்கு ஏனைய நாடுகளின் நிர்வாகக் கட்டமைப்பை விளங்கிக் கொளவது அவசியமானது என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை மீனவர்கள் ஐந்துபேர் விடுதலை



(கொழும்பு)

இந்தியக் கடல் எல்லையில், அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததற்காக கைது செய்யப்பட்டு, புதுச்சேரி சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள், 5 பேர் விடுவிக்கப்பட்டு, அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வேளாங்கண்ணி அருகே, இந்தியக் கடல் எல்லையில், 8 கடல மைல் தூரம் அத்துமீறி நுழைநது, மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 5 பேரை, இந்தியக் கடலோரக் காவல் படையினர், கடந்த டிசம்பர் 15ஆம் திகதி கைது செய்தனர்.

இவர்கள், புதுச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இலங்கை மீனவர்கள் மீதான வழக்கை மீளப் பெறுமாறு, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், கடந்த மாதம் புதுச்சேரி அரசுக்கு உத்தரவிட்டது.

அதனடிப்படையில், இலங்கை மீனவர்கள் மீதான வழக்கை, மாநில அரசு மீளப் பெற்றது. இலங்கை மீனவர்கள் நாடு திரும்ப, மத்திய உள்துறை மற்றும் வெளியுறவு அமைச்சகம் அனுமதி அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப் நூதனசாலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தக்ஸீரா நூதனசாலையைச் சென்று பார்வையிட்டுள்ளார். அந்தப் பிராந்தியத்தின் தலைவர் உள்ளிட்ட மக்கள் அவரை வரவேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர, இந்த பிராந்தியத்தில் டெங்கு தொற்று தாக்கியபோது, அதனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும், தொற்றுக்கு உள்ளானவர்களுக்கான உறுதியான சிகிச்சை



அளிக்கவும் ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ முக்கிய பங்காற்றினார்.

இந்தப் பணிகளுக்கென ஜனாதிபதி இலங்கையில் இருந்து விசேட மருத்துவ குழுவொன்றை அங்கு அனுப்பி வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

சுற்றுலா வ்சாவில் இலங்கை வந்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இந்திய பிரஜை ஒருவர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குச்சவெளிப் பகுதியில் வைத்து நேற்று முனதினம் கைது செய்யப்பட்டதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் திருகோணமலை. நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட வுள்ளார்.

# சர்வதேச பொறியியலாளர் மாநாடு கொழும்பில் நடாத்த ஏற்பாடு

ஆசிய பசிபிக் நாடுகளைச் சேர்ந்த ஆலோசனைப் பொறியியலாளர் கூட்டமைப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் 3ஆம் திகதி வரை கொழும்பில் சர்வதேச மாநாடொன்றை நடத்தவுள்ளது.

இலங்கை ஆலோசனைப் பொறியிய லாளர் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜாபக்ஷ ஆரம்பித்து வைப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த மாநாட்டில் ஆசிய பசிபிக் நாடுகளைச் சேர்ந்த நூறுக்கும் அதிகமான பொறியியல் நிபுணர்கள் கலந்து கொள்வர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநாடு குறித்த மேலதிக விபரங்களுடன், ஏற்பாட்டாளர்கள் சார்பாக பொறியியலாளர் கே. நவரட்னராஜா இணைந்து கொள்கிறார்.

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஒருநாள் சேவையின் கீழ் தபால் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்த குழுவினர் தபால் தலைமையகத்தின் முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தபால் அடையாள அட்டைகளை வழங்குவதில் தாமதம் நிலவுவதாக தெரிவித்தே அவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவிடம் வினவிய போது சம்பவம் தொடர்பில் தபால் அதிபருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

# ஓய்வூதியக் கொடுப்பனவு தாமதம் விவசாயிகள் திரண்டு போராட்டம்

(அநுராதபுரம்)

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்படாமைக்கு எதிராக அநுராதபுரம் நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. தமக்கு மூன்று மாதங்களுக்கான ஓய்வூதிய தவணைக் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் தாம் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால் காந்த, விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதியத்தை உடனடியாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் சட்டத்தரணி சுமனா ஆரியதாஸ விடம் வினவியபோது, விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நிதியை கோரியுள்ளதாக தெரிவித்தார்.

எனினும் நிதியமைச்சு அதற்கு இதுவரை சாதகமான பதிலை வழங்கவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் டெங்கு அபாயம்; கட்டுப்படுத்த துரித ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு நகரில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள பிரதேசங்களை இலக்காகக் கொண்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மாதம் 14 ஆம் திகதி மற்றும் 15 ஆம் திகதிகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கொழும்பு நகரில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் டெங்கு நோயாளர்களின் புள்ளிவிபர அடிப்படையில் 50 வீதமான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச சின் மேலதிக செயலாளர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் பொரளைப் பகுதியை அண்டிய 6 பிரதேசங்களில் உள்ள அரச தனியார் அலுவலகங்கள் மற்றும் வீடுகளை பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக 150 குழுக்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர், பொலிஸார், சுற்றாடல் பிரிவு அதிகாரிகள், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகள் ஒன்றிணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு கொழும்பு மாநகர சபையின் பொறியியல் பிரிவு அதிகாரிகள் பிரதேசத்தில் நீர் வடிகான்கள் மற்றும் பிரதேசத்தில் உள்ள நீர்நிலைப் பிரதேசங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

# கொழும்பில் ஆசிய சாரண ஜம்போரி



(கொழும்பு)

சாரண நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, ஆசிய சாரண ஜம்போரி - 2012, எதிர்வரும் ஏப்பிரல் 1ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை தம்புல்ல, கண்டலம என்ற இடத்தில் இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வு ஏப்பிரல் மாதம் 1ஆம் திகதி, இலங்கையின் பிரதம சாரணரான ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில், ஆசிய சாரண நிறைவேற்றுக் குழுவின் தலைவரும், பிலிப்பீன்ஸ்சின் உப ஜனாதிபதி ஜேஜோமார் சீ பினாயியும் கலந்து கொள்ளவுள்ளதாக பிரதம சாரண ஆணையாளர் சீ. புட்டுவன்கள தெரிவித்துள்ளார்.

பல வெளிநாடுகளில் இருந்து வரும் ஆயிரத்து 500 சாரணர்களுடன் 20 ஆயிரம் உள்ளூர் சாரணர்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**கீழே காணப்படும் வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

32) △ + □ - ○ = 5

□ = 8, ○ = 12 எனின், △ இன் பெறுமதி யாது?.............................................

33) □ - ○ - △ = 10

□ = 50, △ = 15 எனின், ○ இன் பெறுமதி யாது?.............................................

34) என்னிடமுள்ள பணம் ரூபா 15 ஆகும். தம்பியிடம் உள்ள பணம் ரூபா 7ஆகும். என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தொகைகள் சமனாவதற்கு நான் தம்பியிடம் எவ்வளவைக் கொடுக்க வேண்டும்?
1. ரூபா 8  2. ரூபா 4  3. ரூபா 11

**பின்வரும் அட்டவணையை அவதானித்து வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

பழக்கடைக்குச் சென்ற நான்கு பேர் வாங்கிய பழங்களின் தொகைகள் குறியீட்டில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டுக்குரிய பெறுமதிகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

↑=5  ↓=10  →=15  ←=20

| பெயர் | பழங்களும் அவற்றின் எண்ணிக்கையும் | | |
|---|---|---|---|
| | மாம்பழம் | அப்பிள் | அன்னாசி |
| கமலம் | → | ↑ | → |
| ஈஸ்வரி | ← | → | → |
| வசந்தி | ↑ | ↓ | ↑ |
| ஜனனி | ← | ↑ | ↓ |
| பானுஷா | → | ↑ | ↑ |

35) ஈஸ்வரி வாங்கிய அப்பிள் எத்தனை?
1. 5  2. 10  3. 15  4. 20

36) மொத்தமாக 20 பழங்கள் வாங்கியவர் யார்?
1. கமலம் 2. ஈஸ்வரி 3. வசந்தி 4. பானுஷா

37. இவர்களுள் கூடுதலாகப் பழங்கள் வாங்கியவர் யார்?
1. ஜனனி 2. வசந்தி 3. ஈஸ்வரி 4. கமலம்

38) ஒரே அளவான பழங்கள் வாங்கியவர்கள் யாவர்?
1. கமலமும், வசந்தியும் 2. ஜனனியும், ஈஸ்வரியும்
3. பானுஷாவும், கமலமும் 4. கமலமும், ஜனனியும்

39) ஐவரும் மொத்தமாக வாங்கிய பழங்களின் எண்ணிக்கை?
1. 150  2. 160  3. 165  4. 170

40) நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.
1. 10015  2. 100015  3. 1500000

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 26 கேள்விகளின் விடைகள்

01. 1) கோடைகாலத்துக்குரியது, வரண்டகாலம்
2) தங்கம் 3) ஒட்டகம்
4) 1) வாவி 2) ஆறு
5) வியர்வை
6) 1. சூரியன் 2. வானம் 3. உடம்பு 4. நெருபபு
7) முகில் தங்க நிறமாகக் காட்சி தருகின்றது
8) நிகழ்காலம்

02. 1. மகாத்மா காந்தி அகிம்சை வழியில் வெள்ளையருக்கு எதிராகப் போராடிய மாமனிதர் ஆவார்.
2. அதிகாலையில் கிழக்கு அடிவானம் செக்கச் செவேல் எனச் சிவந்திருந்தது.

03. 1. மிகவும் சிறப்பானது
2. ஆதரவின்றிக் கைவிடல்

04. 1. விளக்கினை 2. பயிற்சி

05. 1. கமம், கழனி 2. மந்தை, பட்டி
3. ஏர் 4. அறுவடை 5. வைக்கோற்போர்

06. 1) X 2) X 3) √ 4) √ 5) √

07. 1. மகாவலி 2. லக்சபான
3. பம்பரகந்த 4. இரணைமடுகுளம்
5. ஹற்றன்

08. 1) 4 2) 1 3) 2 4) 2 5) 2

09. 1. Green Colour
2. Mery Christmas
3. River

10. 1. வணக்கம் 2. இடியப்பம்
3. அமருங்கள்

11. 1. மண்வெட்டி 2. வாள்
3. கோடரி 4. அரிவாள்

12. 1. கரப்பான்பூச்சி 2. எறும்பு
3. நுளம்பு 4. ஈ

13. 1) 45 2) 12 3) 43 4) 89
5) 25 6) தரம் 2-8 3-6 4-12 5-4

14. 1) 240/= 2) 180/=
3) 45/= 4) 39/=
5) 160/= 6) 40/=

15. 1 மணி 50 நிமிடம்

16. 37.50

17. 8 cm







# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 27



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**


**முதலில் உள்ள இரண்டு சொற்களுக்கு இடையிலான தொடர்பை விளக்கி அடுத்துவரும் சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01) விளக்கு - வெளிச்சம்  கல்வி -
1. பணம் 2. அறிவு 3. புத்தகம் 4. தாவரம்

02) வீடு - அத்திவாரம்  மரம் -
1. வேர் 2. கிளை 3. பூ 4. தாவரம்

**கீழே காணப்படும் உருவை அவதானித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்கு விடைதருக.**

நீலநிற மலர்கள் →



← வாசமுள்ள மலர்கள்

03) இங்கு காட்டப்பட்டுள்ள நீலமலர்கள் எத்தனை?
...........................................................................................

04) இங்கு காட்டப்பட்டுள்ள வாசமலர்கள் எத்தனை?
...........................................................................................

05) என்னிடம் நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறமுடைய இனிப்புக்கள் இருந்தன. தம்பியிடம் கறுப்பு, மஞ்சள், பச்சை ஆகிய இனிப்புக்கள் இருந்தன. வெள்ளை, மஞ்சள், ஊதா ஆகிய நிற இனிப்புக்கள் இருந்தன எனின் எந்த நிறமுடைய இனிப்பு மூவரிடமும் இருந்தது?
...........................................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

06) பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது
1. சாரதி - பயணிகள் - பிச்சைக்காரர்  2. நடத்துநர் - சாரதி - இசை
3. ஆசனங்கள் - சாரதி - நடத்துநர்

07) சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது
1. கப்பல் - பயணிகள் - பிச்சைக்காரர்  2. மீன் - மீனவர் - கரை
3. நீர் - அலை - மீன்

08) பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A : நித்திரை விட்டெழுதல்  B ..................................  C..................................
D ..................................  E : வீட்டிலிருந்து புறப்படுதல்

| | | |
|---|---|---|
| A உடை அணிதல் | A உணவு உண்ணல் | A முகம் கழுவுதல் |
| B முகம் கழுவுதல் | B முகம் கழுவுதல் | B உடை அணிதல் |
| C உணவு உண்ணல் | C உடை அணிதல் | C உணவு உண்ணல் |

**கீழே ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் சொற்களின் எழுத்துக் கோலத்தை விளங்கி வெற்றுக் கூண்டுக்குப் பொருத்தமான சொல்லைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

09) வெண்பா - பாம்பு - [     ] - யன்னல்

1. புதிர் 2. புதிய 3. புடைவை 4. யானை

10) மரல - ரமல - [     ] - மரல

1. மரல 2. ரமல 3. லமர 4. லரம

**சரியான தொடர்பில் அமைந்த விடையின் கீழ்க் கீறிடுக.**

11) 25, 50, 60, 75 ஆண்டுகளின் பூர்த்தியின் போது கொண்டாடப்படும் விழாக்கள் முறையே,
1. பொன்விழா, வெள்ளிவிழா, பவளவிழா, அமுதவிழா
2. வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழா
3. வெள்ளிவிழா, மணிவிழா, பொன்விழா, வைரவிழா

12) ஐம்புலன்களைக் குறிப்பது,
1. மெய், வாய், கண், மூக்கு, செவி 2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
3. ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இவை கருத்தற்றவை என விளக்குக.**

13) எனது அண்ணா பிறந்தபோது அம்மா எனக்குப் புதிய சட்டை ஒன்று வாங்கித் தந்ததாக அப்பா என்னிடம் கூறினார்.

........................................................................................................

14) இன்ஷிறா முக்கோணத்தின் நான்கு முகங்களுக்கும் நிறம் தீட்டியதாகக் கூறினார்.

........................................................................................................

**சரியான விடையை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

மஸ்றுபாவை விட குமைறா 10 வருடங்கள் இளையவள். நிம்றானை விட அப்துல்லா 5 வருடங்கள் மூத்தவன். குமைறாவும் அப்பதுல்லாவும் ஒரே வயதினர். குறைமாவின் வயது 15 ஆகும்.

15) இவர்களில் மிகவும் இளையவர்,
1. மஸ்றுபா 2. குமைறா 3. நிம்றான் 4. அப்துல்லா


16) மஸ்றுபா, நிம்றான் என்போருக்கிடையே உள்ள வயது வித்தியாசம்,
1. 15 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 5 வருடங்கள் 4. 20 வருடங்கள்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

17) நான் எனது தங்கையிடம் 8 நாணயக் குற்றிகள் கொடுத்துவிட்டு ஒரு காசுத்தாளை வாங்கிக் கொண்டேன் எனின், நான் கொடுத்த நாணயக் குற்றிகள்?
1. 1/- நாணயம் 2, 2/- நாணயம் 3, 5/- நாணயம் 3
2. 5/- நாணயம் 3, 2/- நாணயம் 2, 1/- நாணயம் 2
3. 2/- நாணயம் 4, 5/- நாணயம் 2, 1/- நாணயம் 2

18) இரு வாகனங்கள் ஒரே நேரத்தில் A என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் சென்றன. ஒரு வாகனம் மணிக்கு 40 km மாறா வேகத்தில் சென்றது. மற்றைய வாகனம் மணிக்கு 30 km மாறா வேகத்தில் சென்றது. 30 நிமிடத்தின் பின் இரு வாகனத்திற்கும் இடையிலான தூரம்?
1. 70 km 2. 10 km 3. 35 km

19) கீழே தரப்பட்டுள்ள உருவின் மடிப்புக்களை மடித்து ஆக்கக் கூடிய கட்டை எது?








**தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு 20, 21 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

அப்பாவின் வயதைவிட அம்மாவின் வயது 8 வருடங்கள் குறைவாகும். எனது வயதைவிட அப்பாவின் வயது 30 வருடங்கள் அதிகமாகும். தம்பி என்னை விட நான்கு வருடங்கள் இளையவன். தம்பியின் வயது 8 வருடங்கள் எனின்,

20) அம்மாவின் வயது என்ன?
1. 8 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 34 வருடங்கள் 4. 42 வருடங்கள்

21) எனக்கும் அம்மாவிற்கு இடையில் எத்தனை வருட இடைவெளி காணப்படுகின்றது?
1. 8 வருடங்கள் 2. 30 வருடங்கள் 3. 26 வருடங்கள் 4. 22 வருடங்கள்

22) இரு எண்களின் கூட்டுத்தொகை 46. அவ்விரு எண்களுக்கும் இடையில் வித்தியாசம் 16 எனின், அவ்விரு எண்களும் எவை?
1. 20, 26 2. 15, 31 3. 16, 30 4. 16, 46

**ராமு ஓர் ஆண் பிள்ளை, ராமுவின் அக்காவிற்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரிகள் இருவரும் உள்ளனர்.**

23) ராமுவிற்கு இருக்கும் ஆண் சகோதரர்கள் எத்தனை பேர்?
1. 3 2. 2 3. 1

24) ராமுவிற்கு இருக்கும் பெண் சகோதரிகள் எத்தனை பேர்?
1. 3 2. 2 3. 1

25) 20 மீற்றர் நீளமும், 10 மீற்றர் உயரமும் உடைய சுவருக்கு 2 லீற்றர் தீந்தை தேவையெனில், 40 மீற்றர் நீளமும் 5 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குத் தேவையான தீந்தை எவ்வளவு?
1. 3 லீற்றர் 2. 2 லீற்றர் 3. 4 லீற்றர்

**பின்வரும் விபரம் ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களைப் பற்றியது.**

- **பழம் தரும் மரங்கள் 10**
- **பழம் தரும் மரங்கள் அல்லாதன 20**
- **மாமரங்கள் 4**
- **தென்னைகள் 4**

26) இவ்விபரங்களுக்கு ஏற்ப தோட்டத்தில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 30 மரங்கள் 2. 38 மரங்கள் 3. 34 மரங்கள்

27) 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 1, 8, 15, 22, 29 ஆகியன சனிக்கிழமைகளின் இந்த எண்களின் கூட்டுத்தொகை 75 ஆகும். இம்மாதத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
1. 40 2. 71 3. 80

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்து கோடிடுக.**


28) நெல் - காற்று கத்தரி - ?
1. மரம் 2. கன்று 3. செடி 4. வடலி

29) தென்னை - குரும்பை பனை - ?
1. வடு 2. மூசு 3. கச்சல் 4. நுங்கு


30) ஓவியன் - சித்திரம் வரைதல் சிற்பி - ?
1. கவி எழுதுதல் 2. மட்பாண்டம் செய்தல் 3. சிலை வடித்தல் 4. தளபாடம் செய்தல்

31)

A



B



இவ்விரு உருக்களுள்,
1. A மாத்திரம் சரியானது
2. B மாத்திரம் சரியானது
3. A , B இரண்டும் பிழையானது
4. A , B இரண்டும் சரியானது

# வடமராட்சிக் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சிக்கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த 6ஆம் திகதி கரவெட்டிக் கோட்டத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கரவெட்டிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.


இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன் கோட்டத்தில் ஒப்படைக்கவேண்டும். போட்டிகள் பங்குனி மாதம் 8,9,10 ஆம்திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

ஒரு மாணவன் விரும்பிய 3 நிகழ்வுகளில் பங்கு பற்றலாம். போட்டி இலக்கங்கள் கணினி மயப்படுத்தப்பட வேண்டும். குண்டூசி பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.

19 வயது மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையும் ஏனைய மாணவர்கள் அஞ்சல் அடையாள அட்டையும் பயன்படுத்தமுடியும்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (116)



பூநகரி மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர்போட்டியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், முதலிடத்தைப் பெற்ற யமுனா இல்லத்தலைவிக்கு பிரதம விருந்தினராகிய கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா கேடயத்தை வழங்குவதையும் காணலாம். (112)



புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 8ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ZOA நிறுவன முகாமையாளர் கே.யூட்வோல்ரனும், திருமதி மஞ்சுளா யூட்வோல்ரன், கல்லூரி அதிபர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளார் ஆகியோர் சிறார்களின் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்படுவதைக் காணலாம், (21)

# மீண்டும் ஹர்பஜன்சிங்

காயம் காரணமாக இந்திய அணியில் இருந்து விலகிய ஹர்பஜன்சிங் சிகிச்சை மேற்கொண்டு முழு உடல் தகுதி பெற்றுளளதால் மீண்டும் களமிறங்குகிறார்.

இவர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடங்கும் விஜய் ஹசாரே டிராபி ஒரு நாள் தொடரில் களமிறங்குகிறார்.




இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியது: காயத்தில் இருந்து மீண்டு கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுவிட்டேன். தொடர்ந்து பந்து வீச்சில் செய் ததில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

தற்போது இந்திய அணியில் மீண்டும் இடம் பெற வேண்டும் என்பதே எனது நோக்கம். இதற்காக விஜய் ஹசாரே தொடரில் பஞ்சாப் அணிக்கு கப்டனாக செயறபடுவேன். இதில் முழு அளவில் செயற்பட்டு சாதிக்க முயற்சிப்பேன். இதில் சிறப்பாக செயற்பட்டு வட்டால் இந்திய அணிக்கு திரும்பலாம். ஐ.பி.எல் மட்டுமன்றி இங்கிலாந்தில் கவுண்டி போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தும் மோசமானது அல்ல. ஆனால இது இந்திய கிரிக்கட் வாரியத் தின்(பி.சி.சி.ஐ) முடிவை பொறுத்தது என்றார்.

# தேசிய கபடி குழுவில் கார்த்திகா

(முழங்காவில்)

பூநகரி ம.வியைச் சேர்ந்த அன்ரனி கார்த்திகா என்ற மாணிவி கிரிடா சக்தி நிகழ்வில் தேசிய மட்டத்தில் தேசிய அணியின் கபடிக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இவருக்குரிய சான்றிதழை கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக்கொண்டார். (112)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

பூநகரி - சன்னாவில் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு அதிபர் எம். அருளானந்தம் தலைமை யில் இடம்பெறுகிறது. பிரதம விருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தர்மரத்தினம் கலந்துகொள்கின்றார்.

✹ ✹ ✹

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் பிரதம விருந்தினராகவும், எச்.எஸ்.பி.சி. வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் சி.அரவிந்தன் சிறப்பு விருந்தினராகவும், பாடசாலையின் பழைய மாணவரும் சுஜி தளபாடத் தொழிலக உரிமையாளருமாகிய மு.தங்கராசா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

✹ ✹ ✹

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மகாலிங்கம் சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் ச.அருந்தவரத்தினமும், பாடசாலையின் பழைய மாணவனும் அச்செழு மெ.மி.த.க. பாடசாலையில் இருந்து இளைப்பாறுகை பெற்ற அதிபருமாகிய க. சின்னராசனும் கலந்துகொள்வார்.

# பட்மின்டனில் சம்பியன்



தேசிய பட்மின்டன் சம்பியன் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் பி.எஸ்.பி.பி. அணியின் சிந்து சம்பியன் பட்டம் வென்றார்.

76 ஆவது தேசிய பட்மின்டன் சம்பியன்ஷிப் தொடர் பெங்களூரில் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பைனலில் பி.எஸ்.பி.பி. அணியின் சிந்து ஏ.ஏ.ஐ. அணியின் நேகா பண்டிட்யை சந்தித்தார். இதில் சிந்து 21-9, 21-14 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் பி.எஸ்.பி.பி.அணியின் சவுரப் வர்மா, சக வீரர் சாய் பிரனீத்தை சந்தித்தார். இதில் சவுரப் வர்மா 24-22, 21-7 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

# நியூசிலாந்து அணி வெற்றி

நியூசிலாந்து, ஜிம்பாப்வே அணிகள் மோதிய 20-20 கிரிக்கட் போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அதிரடி வெற்றி பெற்றது.




நியூசிலாந்து சென்றுள்ள ஜிம்பாப்வே அணி, இரண்டு 20-20 போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகிறது.

முதல் போட்டி நேற்று ஆக்லாந்தில் நடந்தது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. ஜிம் பாப்வே அணிக்கு டெய்லர் 3 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றமான தொடக்கம் அளித்தார்.

மடிஜ்வா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். தைபு 27 ஓட்டங்களும், வாலர் 11 ஓட்டங்களும் எடுத்தனர். மசகட்சா மட்டுமே 36 பந்துகளில் தலா 3 சிக்சர் 3 பவுண்டரி உட்பட 53 ஓட்டங்கள் எடுத்தார்.

அதன் பின் களமிறங்கிய சிகும்புரா 24 பந்தில் 48 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். முடிவில் ஜிம்பாப்வே அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது.

அதன்பிறகு களமிறங்கிய நியூசிலாந்து அணி தொடக்க ஆட்டக்காரரான நிகோல் 12 ஓட்டங்களும், அணித்தலைவர் பிரண்டன் மெக்கலம் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தனர்.

# டொப் – 10 பட்டியலில் கோஹ்லி

உலகில் சிறப்பாக ஆடை அணியும் டாப்-10 ஆண்கள் பட்டியலில் இந்திய அணி வீரர் விராத் கோஹ்லி இடம்பெற்று அசத்தியுள்ளார்.



ஆண்களுக்கான பேஷன் இணையத தள பத்திரிகை ஜி.கியு சார்பில் சர்வதேச அளவில் சிறப்பாக ஆடை அணயும் நபர்களைத் தெரிவு செய்தது. இதில் இந்திய அணியின் இளம் கிரிக்கெட் வீரர் விராத் கோஹ்லி (வயது -23) மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

தற்போது அவுஸ்ரேலியாவில் திறமையை வெளிப்படுத்தி வரும் இவருக்கு இது இன்ப அதிர்ச்சியாக அமைநதது. இந்தப் பத்திரிகை வெளியிட்ட செய்தியில், விராத் கோஹ்லி பேட்டிங ஸ்டைல் காரணமாக இநதியாவல் வேகமாக பிரபலமடைந்து வருகிறார் என தெரிவித்துள்ளது.

முதலிடத்தில் ஜேர்மனி நடிகர் மைக்கேல் பஸபாண்டர் உள்ளார். இது தவிர கனடா நடிகர் ரியான கோஸ்லிங், வின்செண்ட் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

### 2 ஜி ஊழல் விவகாரம்

# விசாரணையிலிருந்து தப்புவதற்காக இத்தாலிக்கு ஓடிய கலாநிதி மாறன்



(புதுடில்லி)

2 ஜி ஊழல் விவகாரம் தொடர்பாக மத்திய அமுலாக்க துறையினர் சட்ட நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து வரும் வேளையில் சன்குழுமத் தலைவர கலாநிதி தனது மனைவியுடன் இததாலி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ஆதாயம் பெற்ற மாக்ஸிஸ் நிறுவனம் சன் குழுமத்தில் ரூபா 550 கோடியை முதலீடு செய்தது. இந்தப் பணம் பெற்றதன் நோக்கம் என்ன என்பதும், இந்த சட்ட விரோத பணப் பரிமாற்றம் குறித் தும் மத்திய அமுலாக்க இயக்குனரகம் விசாரித்து கடந்த 7ஆம் திகதி வழக்கைப் பதிவு செய்தது.

முன்னாள் அமைச்சர் தயாநிதி மற்றும் கலாநிதி குற்றவாளியாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே சி.பி.ஐ. தாக்கல் செய்த வழக்கும் உச்ச நீதிமன்றக் கண்காணிப்பின் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 2. 20 மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சன் குழும சிறப்பு விமானம் மூலம் கலாநிதி இத்தாலிக்கு புறப்பட்டு சென்றுள்ளார். இவருடன் மனைவி காவேரி கலாநிதி, சன்குழும தலைமை அலுவலர் விஜயகுமார், இவரது மனைவி மஞ்சுளா ஆகியோர் சென்றுள்ளனர்.

இத்தாலியில் உள்ள புளோரன்ஸ் நகருக்குச் சென்றிருக்கிறார் என்று கூறப்படுகிறது. சட்ட விரோத பணபரிமாற்றம் தொடர்பாக அமுலாக்கத் துறையின் வழக்குப் பதிவிற்கு பின்னர் விசாரணைக்கு அழைப்பர். இந்நிலையில் கலாநிதி இத்தாலிக்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய வர்த்தகக் குழுவினர் ஈரான் செல்ல அமெரிக்கா எதிர்ப்பு


(வோஷிங்டன்)


இந்திய வர்த்தகக் குழு ஈரான்நாட்டிற்கு செல்வது குறித்து அமெரிக்கா மறைமுக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன்மத்தாயிடம் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகளை நீர்த்துப் போகும்வகையில் இந்த உறவுகள் அமைந்துவிடும் என அச்சம் தெரிவித்தது.

ஆப்கான் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஈரானுடன் நட்புறவு கொண்டுள்ளதாக ரஞ்சன் மத்தாய் அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். இருப்பினும் எதிர்காலத்தில் ஈரானிடமிருந்து மசகு எண்ணெய்யைக் கொள்முதல் செய்வதையும் இந்தியா குறைத்துக் கொள்ளவும் வலியுறுத்தியுள்ளது.

# இந்திய இராணுவ வான்வெளி திருவிழா







(சென்னை)

இந்திய இராணுவ அதிகாரிகள் நடத்திய வான்வெளி சாகச நிகழ்ச்சிகள் பொதுமக்கள், கல்லூரி மாணவ, மாணவியர் உட்பட அனைவரையும் கவர்ந்தது.

சென்னை மாநகரம் பரங்கிமலைப் பகுதியில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் அதிகாரிகளுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும், சாகசங்கள் மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தின் பொன்விழா ஆண்டையொட்டி ஒரு சிறப்பான வான்வெளித் திருவிழாவுக்கு இந்திய இராணுவம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி, தாம்பரத்தை அடுத்த சிங்கபெருமாள் கோவில் அருகே உள்ள அனுமந்தபுரம் துப்பாக்கி சுடும் பயிற்சி மையத்தில் பாரசூட் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

வியக்க வைக்கும் இந்தச் சாகச நிகழ்ச்சியை இராணுவம் மற்றும் விமானப்படையினர் இணைந்து நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியைக் காண்பதற்கு பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் என்று ஏராள மானவர்கள் பயிற்சி மையத்தில் குவிந்திருந்தனர்.

சாகச நிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக தரையில் இருந்து 12 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் இருந்து 13 வீரர்கள் ஒவ்வொருவராக பாரசூட் மூலம் குதித்து சாகசம் நிகழ்த்தினர்.

பறவைகளைப்போல் பறந்தபடி, வானில் மிதந்து வந்த வீரர்களைக் கண்டதும் மாணவர்கள் உற்சாகக் குரல் எழுப்பினர். ஆக்ராவில் இருந்து 7 பாரசூட் இராணுவ படை வீரர்களும், 6 விமானப்படை வீரர்களும் இந்தச் சாகச நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.

முதலில் 6 பேரும், அதன் பின்னர் 7 பேரும் விமானத்தில் இருந்து குதித்து தரை இறங்கினர்.

மெய்சிலிர்க்கும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளை குழந்தைகள் மிக உற்சாகமாகக் கண்டு களித்தனர். அதிலும் குறிப்பாக தேசியக் கொடியின் வண்ணங்களுடன் 3 வீரர்கள் பாரசூட்டில் ஒரே நேர்கோட்டில், ஒரே நேரத்தில் பறந்து வந்து தரை இறங்கியதைக் கண்டு பார்வையாளர்கள் மெய்மறந்து போயினர்.

# கூடங்குளத்தை மூட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

(திருநெல்வேலி)

தமிழ் நாட்டின் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி, கூடங்குளத்தில் அணுஉலை எதிர்ப்பாளர்கள் சனிக்கிழமை அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி, திருநெல்வேலியில் இருந்து வாகனங்களில் ஊர்வலமாகப் புறப்பட்ட மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர், மூன்றடைப்பு, நாண்குனேரி, வாகைகுளம், வள்ளியூர் வழியாக கூடங்குளத்துக்கு மாலையில் வந்தடைந்தனர். கூடங்குளம் கிராமங்களில் உள்ள முக்கிய வீதிகளில் பேரணியாக வந்த அவர்கள், மாதா ஆலயம் முன் கூடி, அணுஉலைகளை மூடவலியுறுத்தி கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்போராட்டத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

# சிறுபான்மை மக்களை ஏமாற்றும் எதிர்க்கட்சிகள்

(புதுடில்லி)

உத்திரப் பிரதேசத்தில் முஸ்லிம்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் பகுஜன் சமாஜ், சமாஜவாதி, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் ஏமாற்றி வருகின்றன என்று ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.


உத்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ்கட்சி பொதுச்செயலாளர் ராகுல்காந்தி தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடம் உரையாற்றிய ராகுல் காந்தி, உத்திரப் பிரதேசத்தில் முஸ்லிம்களும், தாழ்த்தப்பட்டோரும் இன்றும் மிக மோசமான நிலையில் இருப்பதற்கு இப்போதைய மாயாவதி அரசும், முந்தைய சமாஜவாதி, பா.ஜ.க அரசுகளும்தான் காரணம் என்று குற்றம்சாட்டினார்.

அனைத்துக் கட்சியினரும் முஸ்லிம்களுக்கு நன்மை செய்வதாகப் பேசி வருகின்றனர். இங்கு சுமார் 70 மாவட்டங்கள் உள்ளன. இதில் எத்தனை மாவட்ட நீதிமன்றங்களில் முஸ்லிம்கள் நீதிபதியாக உள்ளனர். எத்தனை மாவட்டங் களில் பொலிஸ் கண்காணிப்பாளராக தாழ்த்தப்பட்டோர் உள்ளனர் என்று ராகுல் கேள்வி எழுப்பினார்.


நான் செல்லும் இடங்களில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களும், ஏழைகளும் என்னிடம் கேட்கும் பொதுவான கேள்வி ஒன்று உள்ளது.

நாங்கள் பல தலைமுறையாக கடுமையாக உழைத்தும் எங்கள் வாழ்க்கையில் நிம்மதியில்லை. வறுமையில் இருந்தும், கடனில் இருந்தும் மீள முடியவே இல்லையே அது ஏன்? என்பதுதான் அந்தக் கேள்வி.



இங்கு பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த 3 கட்சிகளுமே உங்கள் நலனில் அக்கறை காட்டவில்லை என்பதுதான் அதற்குக் காரணம். ஒரு குறிப்பிட்ட 10 சதவீத மக்களின் நலனில்தான் அவர்கள் அக்கறை செலுத்தினர்.

தாங்களின் வாக்கு வங்கிகள் என்று கருதும் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும்தான் பகுஜன் சமாஜ், சமாஜவாதி, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் நன்மை செய்துள்ளன என்று எதிர்க்கட்சிகளின் மீது குற்றம்சாட்டியுள்ளார்.







# இளைஞர்களும், மாணவர்களும் தி.மு.க.வுக்கு வலுச்சேர்க்கின்றனர்

(நாகர்கோவில்)

தி.மு.க.வுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இளைஞர்களும், மாணவர்களும் பங்காற்றி வருவதாக அக்கட்சியின் பொருளாளரும், இளைஞரணி மாநிலச் செயலருமான மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

நாகர்கோவில் பார்வதிபுரத்தில் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, மாவட்டச் செயலரும் முன்னாள் அமைச்சருமான என். சுரேஷ்ராஜன் தலைமை வகித்தார்.

மு.க.ஸ்டாலின் இந்நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில்; தி.மு.க.வின் துணை அமைப்பான இளைஞரணி 1989இல் தொடங்கப்பட்டது. முன்னர், மாவட்டச் செயலர்களின் பரிந்துரையின்பேரில் இளைஞரணிக்கு நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்.

இப்போது தனியாக விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. வயது வரம்பும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1967இல் தமிழகத்தில் அண்ணா தலைமையில் அமைந்த ஆட்சியின் வெற்றிக்கு தலைவர்களின் பிரசாரம் ஒருபுறம் இருப்பினும், மறுபுறம் மாணவர்களும், இளைஞர்களும் உறுதுணையாக இருந்தனர்.

மொழிப் போராட்டத்தின் போது இளைஞர்கள் உணர்வுபூர்வமாக ஈடுபட்டதுடன் பலர் உயிரையும் மாய்த்தனர். ஆனால் இன்று அந்த நிலையில் மாணவர்கள் இல்லாதது வருத்தமளிக்கிறது என்றார்.

# அமிதாப்பச்சனுக்கு அறுவை சிகிச்சை

ஹொலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனுக்கு வயிற்றில் ஏற்பட்ட நோய் காரணமாக நடந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

ஹொலிவுட் திரையுலக சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் வயிறு சம்பந்தமான பிரச்சினையால் நீண்டவருடங்களாக அவதிப்பட்டு வந்தார்.

கடந்த 1982ஆம் ஆண்டில் கூலி படத்தின் படப்பிடிப்பில் சண்டை காட்சியில் நடித்தபோது அமிதாப்பச்சனுக்கு குடல் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து அவர் வைத்தியசாலையில் மாதக்கணக்கில் சிகிச்சை பெறவேண்டியதாகி விட்டது. அதன்பிறகு 2005ஆம் ஆண்டு அமிதாப்பச்சன் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்போது அவருக்கு குடல் அறுவை சிகிச்சை நடைபெற்றது. எனினும் அவர் வயிற்று வலியால் தொடர்ந்து அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து 69 வயதாகும் அமிதாப்பச்சன் மும்பை அந்தேரியில் உள்ள செவன் ஹில்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு நேற்று முன்தினம் அறுவை சிகிச்சை செய்ய வைத்தியர்கள் முடிவு செய்தனர். அதன்படி அமிதாப்பச்சனுக்கு 3 மணி நேரம் அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதன்பிறகு நல்ல உடல் நலத்துடன் இருப்பதாக வைத்தியர் அஸ்தனா தெரிவித்துள்ளார்.

# சிரியாவில் இராணுவம் தாக்குதல் செய்மதி புகைப்படங்கள் வெளியீடு



சிரியாவில் பொதுமக்கள் மீது இராணுவம் வான்வெளித் தாக்குதல் நடத்தும் புகைப்படங்களின் செய்மதிப் படங்களை சிரியாவுக்கான அமெரிக்கத்தூதர் ரொபேர்ட் ஃபோர்ட் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இப்புகைப்படங்கள் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை அப்படியே படம்பிடித்துள்ளது.

ஆயுதமேந்திய குழுக்களே இததாக்குதலுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என சிரியா அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் யார் இந்தத் தாக்குதல்களை நடத்துவது என்பதும், அத்தாக்குதல்களை மறைப்பதற்கு அவர்கள் செய்யும் முயற்சிகளும் எமக்கு நன்றாகவே தெரியும் என்றார்.

கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் சிரியாவில் நடைபெற்று வரும் இத்தாக்குதல்களில் 7000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்கொடூரத் தாக்குதல்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என ஐ.நா.வின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கண்டனம் விடுத்துள்ளார்.

உலகச் செய்திகள்

## பேஸ்புக்கால் வந்த வினை

இன்று வயது வேறு பாடின்றி அனைவரையும் ஆட்டிப்படைக்கும் சமூக வலைத்தளமாக பேஸ்புக் விளங்குகிறது. இதனால் பல நன்மைகள் காணப்படுகின்ற போதிலும் சில சந்தர்ப்பங்களில் சங்கடங்களும் உருவாகுவது உண்டு. அதேபோல தற்பொழுது பெரியதொரு சங்கடம் உருவாகி பேஸ்புக் உலகை கலங்கடித்துக் கொண்டிருக்கின்றது.

அதாவது 15 வயதுடைய "கன்னா" எனும் ...மி இந்தப் பேஸ்புக் சமூக வலைத்தளத்திற்கு அடிமையானதைப் பொறுக்க முடியாத கோபக்காரத் தந்தை தனது 0.45 மில்லிமீட்டர் கைத்துப்பாக்கியால் மகளின் லேப்ரொப்பை சுட்டுத்தள்ளியுளளார். அத்துடன் ஆறிவிடாத அவரது கோபம் அச்செயற்பாட்டை வீடியோ எடுத்து தனது மகளின் பேஸ்புக் பக்கத்திலேயே பதிவேற்றம் செய்தும் இருக்கின்றார்.

## இளவரசர் ஹரியை கொலை செய்வோம் தலிபான் அமைப்பு எச்சரிக்கை விடுப்பு

விமானியாகப் பயிற்சி பெற்ற இளவரசர் ஹரி ஆப்கானிஸ்தானுக்கு வருகை தந்தால் அவரைக் கொல்வோம் என தலிபான் தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸ் - மறைந்த இளவரசி டயானாவின் இளைய மகன் ஹரி (வயது -27). மூத்த மகன் வில்லியம் கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி தனது நீண்ட நாள் காதலி கேத் மிடில்டனை திருமணம் செய்தார்.

ஹரி இங்கிலாந்து விமானப் படையில் சேர்ந்தார். அங்கு போர் விமானப் பயிற்சி முடித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் தலிபானுக்கு எதிரான தாக்குதலில் இங்கிலாந்து விமானப் படையும் ஈடுபட்டுள்ளது. அங்கு 4 மாத விமானப் பணியில் ஈடுபடுவதற்காக அனுப்பப்படவுள்ளதாக டெய்லி மெயில் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

# அமெரிக்கா, கனடா, பிரிட்டன் மகிழ்ச்சியில் ஏழை நாடுகள்

உலகின் மிகப் பணக்கார நாடுகளாகத் திகழும் அமெரிககா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகள் மகிழ்ச்சியில் இன்னமும் ஏழைகளாகவே திகழ்கின்றன ...பது சமீபத்தில் நடத்திய ஆய ...வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி, போர், இயற்கைப் பேரிடர் என பல் வேறு பிரச்சினைகளுக்கு நடுவில் உலக மக்களின் மகிழ்சசி குறித்து இப்சஸ் குளோபல் நிறுவனம் ஆய்வொன்றை நடத்தியது.

24 நாடுகளில் 18,000 பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. சர்வதேச அளவில் மகிழ்ச்சியானவர்களின் எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது அதிகரித்துள்ளது.

அதாவது ஆய்வுக்கு உட்படுததப்பட்ட 4 இல் 3 பேர் வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், 4 இல் ஒருவர் மிகவும் மகிழ்ச்சயாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியாக உள்ளவர்களில் இந்தியர்கள், இந்தோனேஷியர்கள் மற்றும் மெக்சிகோ நாட்டினர் முக்கிய இடம் பிடித்துள்ளனர். ஹங்கேரி, தென்கொரியா, ரஷ்யா, ஸ்பெயின் மற்றும் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்களில் மிகவும் குறைவானவர்களே மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மண்டலவாரியாகப் பார்த்தால் இலத்தீன் அமெரிக்காவில் அதிகம் பேர் மகிழ்ச்சியாக உள்ளனர். வட அமெரிக்கா, ஆசியா-பசுபிக், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபி ரிக்கா ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களில் 15 சதவீதம் பேர் மட்டுமே மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

# சீனாவில் முட்டையிடும் சேவல் விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்



சீனாவிலுள்ள சேவலொன்று முட்டையிடுவது விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் மூழ்கவைத்துள்ளது. இதற்கான காரணம் என்னவென்று அறிந்து கொள்வதற்கு தற்போது ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சீனாவின் அன்ஹய் மாகாணத்தில் உள்ள சுமியோ கிராமத்தில் வசிக்கும் "ஹவாங் லீ (வயது -47) என்பவர் வளர்த்து வந்த சேவலே இவ்வாறு முட்டையிடத் தொடங்கியுள்ளது.

இவர் தனது கோழிப் பண்ணையில் 7 கோழிகளையும், ஒரு சேவலையும் வளர்த்து வந்துள்ளார். குளிர்காலத்தின் போது கோழிகள் அனைத்தையும் இவரின் குடும்பத்தினர் சமைத்து உண்டு விட இந்தச் சேவல் மட்டும் எஞ்சியுள்ளது. இச்சேவல் தற்போது முட்டையிடுகிறது.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், மாரி காலத்தில் கோழிகள் அனைத்தையும் சமைத்து விட சேவல் மட்டுமே எஞ்சியிருந்தது. ஒருநாள் கோழிக்கூட்டைச் சென்று பார்க்கையில் அங்கு சேவலுக்கருகில் முட்டை இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

மற்றவர்கள் யாரும் வேடிக்கைக்காக முட்டையைக் கொண்டு வந்து சேவலுக்கு அருகில் வைத்திருக்கலாமென நான் நினைத்தேன். ஆனால் அடுத்தநாள் இன்னுமொரு முட்டையும் இருந்தது. அதனால் நான் மூன்றாவது நாள் கோழிக்கூடு அருகில் காத்திருந்தேன். ஆச்சரியப்படும் வகையில் அச்சேவல் முட்டையிட்டது எனக் கூறியுள்ளார்.

இத்தகவல் தொலைக்காட்சிகள் மூலம் எல்லா இடங்களுக்கும் பரவியதையடுத்து உள்நாட்டு விவசாயத்துறை அமைச்சகத்தின் விஞ்ஞானிகள் எனது சேவலைப் பரிசோதனைக்காக வாங்கிச் சென்றுள்ளனர்.

அது சேவலைப் போன்று தோற்றமளிக்கும் கோழியா அல்லது அனைத்து கோழிகளும் இறந்தபின் அச்சேவல் கோழியாக மாறிவிட்டதா என விஞ்ஞானிகள் ஆராய விரும்புகிறார்கள் என ஹவாங் லீ கூறியுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை அது ஏனைய சேவல்களைப் போன்றே காலையில் எழுந்து கூவும் ஏனைய கோழிகளுடன் அது சேவல் போன்றே நடந்துகொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

கொழும்பிலுள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்புபவர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் நாளை Sats - Tech Engineer's No 300, K.K.S. Road, Jaffna என்ற முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 8812 / 0777710785 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மிக்சர், இனிப்பு வகை தயாரிப்பில் அனுபவமுள்ளவர்கள் அல்லது பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் பாரதி இன்டஸ்றீஸ், இல. 19, சம்பியன் லேன், கொக்குவில் என்ற முகவரிக்கு நேரில் வரவும்:

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் **D.M.T. Multi National Company** இற்கு முகாமைத்துவப் பயிற்சிக்காக பின்வருவோர் தேவை. Supervior, Asst. Manager, Manager (12 பேர் மட்டும்) 6 மாதப் பயிற்சி, பயிற்சியின்போது சம்பளம், தங்குமிட வசதி இலவசம். ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவல்களுக்கு 0776219536 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நாராயணா கட்டடப் பொருள விற்பனை நிலையத்திற்கு கணக்கு எழுதுநர் தேவை. ஆர்வமுள்ள 20 -35 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை முகாமையாளர், நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர், 92 C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 5390 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கணினியில் தட்டச்சுத் தெரிந்த, பழக விரும்பும் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர். மற்றும் பாடசாலை உபகரணங்கள் விற்பனை செய்வதற்கும் பெண் பணியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று காலை 8.30 -12.00 மணிவரை அபிஷேக் மல்ரி ஸ்பொட் அன்ட் நெற்கபே, இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

மேலதிக தகவல்களுக்கு 071 8565540, 0779005856 இற்கு தொடர்பு கொள்ளவும்.

**Arrul Global Express** என்ற நிறுவனத்தில் பணியாற்ற பெண் பணியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று இல. 01. பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 6113 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு **AD** தரச் சாரதி தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0771176689 இற்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

தச்சு வேலை தெரிந்தவர்கள், கூலியாட்கள், பண்ணை வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் மல்ரி பாம் சென்ரர், லிப்றா மரத்தளபாட நிலையம், 61 இராமநாதன் வீதி, கலட்டி என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு 0773001763, 021 221 9292 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வீட்டு வான் சாரதி தேவை. 40 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் S.K.ஏஜென்சி, இல. 128/B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 6884 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கணணாடி வெட்டத் தெரிந்த அனுபவமுள்ளவர் வேலைக்குத் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777686021 அல்லது 021 222 1153, 0773114415 இற்கு தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக இயக்குநரின் தனிப்பட்ட செயலாளராக பணியாற்ற 25 - 45 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் ஒப்பந்த அடிப்படையில் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட், முன் மாதிரியான வீசா ஆலோசனை நிறுவனம். 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 2219016 இற்கு தொடர்பு கொள்ளவும்.

இதே நிறுவனத்தில் பகுதி நேர வீசா ஆலோசகர் பதவியில் பணியாற்ற ஆட்கள் தேவை. அரசாங்க, தனியார் துறைகளில் பணியாற்றிய தற்போது பணியாற்றும் மற்றும் ஆர்வமுள்ள 21-65 வயதிற்குட்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகத்தேர்வு இன்று 2 மணிக்கு மேற்கூறப்பட்ட அலுவலக முகவரியில் இடம்பெறும்.

உடுவிலில் இயங்கும் **Pharmacy** ஒன்றுக்கு வேலை தெரிந்த பெண் ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0752399619 இற்கு தொடர்பு கொள்ளவும்.




அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியில் வடபகுதி காட்சிகள்... (படப்பிடிப்பு - விசிந்தன்)

# வாவியில் மூழ்கி சிறுவன் பலி

(கொழும்பு)

கலேவெல- பிபிதுணகம வாவியில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இந்த வாவியில் நேற்றுமுன தினம் மாலை குறித்த சிறுவன் நீராடச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பிபிதுணகம பிரதேசத்தில் வசிக்கும் 9 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சிறுவனின் சடலம் கலேவெல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வடக்கில் படைத்தளங்களில் சனத்தொகைக் கணக்கெடுப்பு

## படை அதிகாரிகள் ஊடாக நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள முப்படைகளினதும் படைத்தளங்களில் சனத்தொகைக் கணக்கெடுப்பை மேற கொள்வதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புள்ளி விபரத் திணைக்களத்தினால் நாடு பூராகவும் மேற்கொள்ளப்படவிருக்கும் சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது வடக்கிலுள்ள முகாம்களுக்குள் கணக்கெடுப்பாளர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது

இதன் காரணமாக மேற்படி சனத்தொகைக் கணக்கெடுப்பை படை முகாம்களுக்குள் சென்று மேற்கொள்வதற்காக படை அதிகாரிகளையே கணக் கெடுப்பாளர்களாக நியமிப்பதற்கும் அப் படை அதிகாரிகள் மூலமாக கணக்கெடுப்பை நடாத்துவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்காக விசேடமாக நியமிக்கப்பட்டிக்கும் படை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. (க)

# கடமையின்போது முறைகேடு பொலிஸ் உத்தியோகத்தர் நீக்கம்

(கொழும்பு)

புத்தளம் மற்றும் மாரவில ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒழுக்கத்தை மீறியமையை கருத்திற் கொண்டு அவர்களை பணிநீக்கம் செய்ததாக பிரதேசத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

புத்தளம் பொலிஸ் நிலையத்தின் இரு கான்ஸ்டபிள்கள் கடமைக்காக வெளியில் சென்ற போது, அவர்களிடம் மேலதிகமான பணம் காணப்பட்டமையே பணிநீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தமது பொறுப்பிற்கு அப்பாற்பட்ட கடமைகளில் இவர்கள் ஈடுபட்டமையும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. புத்தளம் மற்றும் சிலாபம் ஆகிய பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளை அடுத்து இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# யாழ்ப்பாணக் குடாவின் குக்கிராமங்கள் அனைத்துக்கும் இனி மின்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கிராமிய மின்விநியோகத திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.


மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள குக்கிராமங்கள் அனைத்திற்கும் மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கு துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் ஊடாக இக்கிராமங்களுக்கான மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை யாழ். செயலகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இச்செயற்திட்டத்தின் முதற்கட்டமாக இதுவரை மின்சார இணைப்பு கிடைக்காத கிராமங்களது விபரங்கள் திரட்டப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக யாழ். செயலக அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் இவ் விடயம் தொடர்பான பணிப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# வாக்காளர் இடாப்பில் இரட்டைப் பதிவு; அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)



வாக்காளர் பதிவேட்டில் இரட்டைப் பதிவுகளை வைத்திருப்போர் அவற்றை நீக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

2011 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் இரண்டு பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட 150,000 இற்கும் அதிகமான வாக்காளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்திலுள்ள அதிகமானோர் இரண்டு பிரதேசங்களில் தம்மை பதிவு செய்துக்கொண்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் சுமார் 62,000 இற்கும் அதிகமானவர்கள் இரு இடங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு பிரதேசத்தில் மாத்திரம் தம்மை பதிவு செய்யுமாறு இவர்களுக்கு கடிதம் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்காக அவர்களுக்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இந்தக் காலப் பகுதிக்குள் தம்மை உரியவாறு பதிவு செய்யத் தவறும் நபர்களின் பெயர்களை ஏதேனும் ஒரு பிரதேசத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு; சரியான செயற்திட்டம் வேண்டும்

## பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

முறையான திட்டங்கள் இல்லாமல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று பட்டம் பெற்ற வருடத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என அந்தச் சங்கத்தின் இணைப்பாளர் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான்தோன்றித் தனமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பெயர் பட்டியலை உடனடியாக இரத்து செய்து முறையான திட்டத்தின் மூலம் பட்டதாரிகளுக்கு வேலை



வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

# சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்த இந்தியா உதவி

(கொழும்பு)

நாட்டில் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் உதவியுடன் புதிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

சுதேசிய வைத்திய முறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான இந்தியாவுடன் மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட இலங்கை தீர்மானித்துள்ளது. இதன்பொருட்டு இந்திய சுகாதார, குடும்ப நல அமைச்சின் செயலாளர் அணில்குமார் இலங்கை வந்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர், சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திஸாநாயக்கவுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# யாழ். பள்ளிவாசல் முன்பாக வாகனம் நிறுத்தத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியிலுள்ள பள்ளிவாசல் முன்பாக வாகனம் நிறுத்தத் தடை, ஒலி எழுப்பத் தடை என இரு அறிவித்தல் பலகைகளை யாழ். மாநகரசபை அமைத்துள்ளன.

மாநகர சபை உறுப்பினர் எம்.முஸ்தபாவிடம் பெரிய முஹிதீன் பள்ளிவாசல் நிர்வாகம் விடுத்த கோரிக்கையின் பயனாக மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவின் அனுமதியுடன் இவ்விரு அறிவித்தல் பலகையும் நாட்டப்பட்டுள்ளன.

பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மாநகர முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர். (105)

# யாழ்ப்பாணத்தின் 'இடர் வரைபடம்' களம் இறங்கும் அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படும் சமயங்களில் மீட்பு நடவடிக்கைகளை இலக்குவாக்கும் நோக்குடன் 'இடர்வரைபடம்' தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தேசிய இடர்முகாமைத்துவப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

இதற்காக யாழ். குடாநாட்டின் அனைத்துப் பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இயற்கை அனர்த்தங்களால் இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய இடங்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை துரிதமாகவும் சிரமமின்றியும் மேற்கொள்வதற்கு இந்த இடர் வரைபடம் எதிர்காலத்தில் உதவியாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடர் வரைபடத்தை தயாரிப்பதற்கான ஆரம்ப பயிற்சிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அனேகமாக ஏப்ரல் மாதம் அளவில் இந்த வரைபடம் தயாரிக்கும் வேலைகள் நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# மன்னார் தாக்குதல் சம்பவம் சூத்திரதாரி பொலிஸில் சரண்

(மன்னார்)

மன்னார் பிரதேசசபையின் உபதலைவரான அந்தோனி சகாயம் என்பவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படும் சந்தேக நபர்களில் முக்கிய சந்தேக நபர் நேற்று முன்தினம் மாலை தம்மிடம் சரணடைந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் பிரதேசசபையின் உபதலைவரான அந்தோனி சகாயம் என்பவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத நபர்கள், வீட்டிலிருந்த மனைவி மற்றும் பிள்ளைகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த மனைவியும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதல் மேற்கொண்ட நபர்களை பொலிஸார் தேடி வந்த நிலையிலேயே முக்கிய சந்தேக நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இவரிடம் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மன்னார் பிரதேசசபையின் உபதலைவரான அந்தோனி சகாயம் என்பவரது வீட்டில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேசசபையின் உபதலைவரான அந்தோனி சகாயம் என்பவரது வீட்டினுள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்த அவரது மனைவி, மகன் மீது கண்மூடித்தனமாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# தாயையும் மகளையும் மோதித் தள்ளிய கன்ரர்

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த தாய் மற்றும் மகளை அவர்களின் பின்னால் வந்த கன்ரர் வாகனம் மோதியதில் அவர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


நெல்லியடி மூத்த விநாயகர் கோவிலடிப் பகுதியில் நேற்று மாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த தாயும் மகளும் துவிச்சக்கர வண்டியில் வந்த வேளை அவர்களுக்குப் பின்னால் வந்த கன்ரர் வாகனம் இருவரையும் மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இதன்போது தாயும் மகளும் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய கன்ரர் வாகனத்தின் இலக்கம் குறிப்பெடுக்கப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

## சி.பீ. கிண்ண முக்கோணத் தொடர்

# அவுஸ்ரேலியாவை 4 விக்கெட்டால் தோற்கடித்தது இந்திய அணி



அவுஸ்ரேலியாவில் நடைபெறும் சி.பீ. கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலிய அணியை இந்திய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டுள்ளது.

அடிலெய்ட்டில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 269 ஓட்டங்களைப்பெற்றது.

அவுஸ்திரேலிய அணியின் சார்பில் டேவிட் ஹஸி 72, அறிமுக வீரரான பீட்டர் பொரெஸ்ட் 66, கிளார்க் 38, கிறிஸ்ரியன் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சாளர்களில் உமேஸ் யாதவ் 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வினய் குமார் 58 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணி 49.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய அணியின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் 92, ஷேவாக் 20, ஹோலி 18, ரோகித் சர்மா 33, சுரேஷ் ரெய்னா 30 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்று இந்திய அணியைப் பலப்படுத்தினர்.

அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி ஆரம்பத்தில் ஓட்டங்களைப் பெற தடுமாறிக்கொண்டிருந்தார். எனினும் இறுதியில் வீறுகொண்டெழுந்த அவரே இந்திய அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

கடைசி ஓவரில் இந்திய அணி 6 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. கிளின்ட் மெக்கே வீசிய அந்த ஓவரின் இரண்டாவது பந்தில் அஸ்வின் ஒரு ஓட்டத்தைப் பெற 3 ஆவது பந்தில் டோனி சிக்ஸர் ஒன்றை அடித்தார்.

மெக்கே வீசிய அடுத்த பந்தை டோனி அடித்தபோது அது எல்லைக்கோட்டின் அருகே வைத்து பிடிக்கப்பட்டது. எனினும் அது நோபோலாக அமைந்ததுடன் அப்பந்தில் டோனி இரு ஓட்டங்களைப் பெற்றார். 4 ஆவது பந்தில் டோனி மேலும் 3 ஓட்டங்களைப் பெற்றதால் இந்திய அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. டோனி ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மக்கே 3, டோஹெட்டி 2, ஹரிஸ் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக கம்பீர் தெரிவானார்.

## காணி, பொலிஸ்...

ஒப்பந்தத்தின் பின்னர் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் இந்தியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் இலங்கையை விட சிறிய நாடான சுவிட்சர்லாந்திலும் இதேபோன்று அதிகாரப் பகிர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அந்த நாடுகள் பிரிந்து விடவில்லை.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டாலும் அதனால் ஒரு பிரச்சினையும் ஏற்படாது. அப்படி பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை சட்டப்படி கட்டுப்படுத்தும் வழிறைகளும் 13 ஆவது அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதால் நாடு துண்டாடப்பட்டுவிடுமென பேரின வாத சிங்களக் கட்சிகள் தெரிவிப்பதில் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்க பிரதிநிதிகள்...

அமெரிக்கத் தூதரகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடி பிரச்சினைகள், அரசியல் தீர்வு தொடர்பாக கூட்டமைப்பிற்கும் அரசுக்கும் இடையே இடம்பெறும் பேச்சுவார்த்தையின் ஸ்தம்பித நிலை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்க நிலைப்பாடு மற்றும் அரசுடன் கூட்டமைப்பு நடத்தும் பேச்சில் முடிவு எட்டப்பட்ட பின்னரே தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து கூட்டமைப்பு பரிசீலிக்குமெனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் கருத்துக்களை செவிமடுத்த அமெரிக்க பிரதிநிதிகள் ஸ்தம்பிதமடைந்துள்ள அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தினர்.

நடந்த பேச்சுக்கள் குறித்த விடயங்களும் ஆராயப்படுமென அமெரிக்க பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டதென சுமந்திரன் தெரிவித்தார்.

அமெரிக்க அதிகாரிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அரசாங்க அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை இலங்கைக்கான விஜயத்தை முடித்த பின்னர் ஒற்ரேரா புதுடெல்லி செல்லவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொல்லங்கலட்டி....

இதன் ஒரு பகுதியாக இந்த வீட்டிலுள்ள கிணற்றை துப்புரவு செய்யும்போது, நேற்று முன்தினம் மாலை அதனுள்ளிருந்து மண்டை ஓட்டு எச்சங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக் காலை குறித்த கிணற்றை மேலும் துப்புரவு செய்த பொலிஸார் அதனுள்ளிருந்து மேலும் சில எலும்பு எச்சங்களை மீட்டுள்ளனர். இவை யாருடையவை என்பது குறித்து ஏதுவும் தெரியவில்லை,

எனினும் 1991 ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயரும்போது சம்பவம் இடம்பெற்ற கிணற்றிற்கு அருகிலுள்ள வீட்டில் மூன்று முதியவர்கள், இடம்பெயர மறுத்து அங்கேயே இருந்ததாகவும், அவர்கள் பின்னர் காணாமல் போயிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அவர்களுடைய எலும்பு எச்சங்களாககூட இவை இருக்கலாம் என நம்பப்படுகின்றது. எனினும் இது தொடர்பான விசாரணைகளை தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் நீதவான் கஜநிதிபாலன், சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன் ஆகியோர் மீட்கப்பட்ட மனித எச்சங்களைப் பார்வையிட்டதுடன், அது தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

## உள்ளக...

பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய அவர், யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்கும் சென்று போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து தகவல்களைத் திரட்டியுள்ளார்

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த ஸ்டீபன் ரப், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தாம் சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்றும், ஆனால் இம்மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அரசாங்கம் உருவாக்குவது முக்கியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## நாட்டை...

பொதுமக்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அனுபவமும் பொலிஸாருக்கே உள்ளது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

இவ்வாறான பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் படையினருக்கு அனுபவம் இல்லை. அதனால் இது தொடர்பிலான தீர்மானங்களை எடுக்கும் போது அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் திஸ்ஸ அத்நாயக்க வலியுறுத்தினார்.

## கனடாவில்....

தீர்வு சம்பந்தமான நியாயமான கருத்துக்கள் குறித்தும் பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த சிவில் சமூகத்தினுடனான சந்திப்பினை எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியாவில் நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் கனடாவில் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் உரையாற்றிய போது சிவில் சமூகத்தை கிண்டலடித்து உரையாற்றி இருந்ததும், அதில் கையொப்பமிடப்பட்டதாக குறிப்பிட்ட நபர்களுக்கு இப்படி ஒரு அறிக்கை வெளியிட்டது தெரியாது என தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலை...

என அவர் கூறினார். விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக இன்று திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்த ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது. பிரதான போராட்டம் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடைபெறவுள்ளது.

கையிருப்பிலுள்ள எரிபொருள் 40 நாட்களுக்குப் போதுமானது என அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே உள்ளூரில் விலை அதிகரிப்புக்கு உலக சந்தை விலை அதிகரிப்பை காரணம் காட்ட முடியாது. ஈரானிய நெருக்கடி நிலையையும் அவர்கள் விலை அதிகரிப்புக்கு காரணம் காட்டுகிறார்கள். ஈரானிலிருந்து 40 சதவீதமான எண்ணையே இறக்குமதி செய்யப்படுகிறது. ஏனையவை டுபாயிலிருந்தும் சிங்கப்பூரிலிருந்துமே இறக்குமதி செய்யப்படுகிறது. எனவே அரசாங்கம் கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊழல், வினைத்திறனற்ற முகாமைத்துவம் மற்றும் தேசத்திற்கு மகுடம் போன்றவற்றுக்கான மிதமிஞ்சிய செலவுகள் ஆகியவற்றின் காரணமாக மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கத்தினால் முடியாதுள்ளது. அது தவிர உலக சந்தையில் விலை அதிகரித்தமையே உள்ளூர் விலை அதிகரிப்புக்கு காரணம் என்பது பொய்யானதாகும் என அவர் கூறினார்.

# எரிபொருள் விலை அதிகரிப்பு மீனவர்கள் எதிர்ப்பு போராட்டம்




(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடி காட்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தென் பகுதி மீனவர்களின் பேராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக வட பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்டிருந்து, படிப்படியாக மீன்பிடித் தொழிலை முன்னெடுக்க முயற்சிக்கின்ற தமக்கு திடீரென 35 ரூபாவால் மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்பட்ட மையானது மிகவும் பாதிப்பாக அமைந்துள்ளதென வடபகுதி மீனவர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் சுமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கும் அதிகமான சிறிய ரக படகு மீன வர்கள் எரிபொருள் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டிருப்பதாக இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ஹேர்மன் குமார பி.பி.ஸிடம் தெரிவித்தார்.

சர்வதேச விடயங்களை விலை அதிகரிப்புக்கு காரணம் காட்டும் அரசாங்கம், பெருங்கொண்டாட்ட நிகழ்வுகளுக்காக பெருமளவு பணத்தை வீணாக செலவு செய்துவிட்டு தொழிலாளர்களை சிரமத்தில் தள்ளுவதாகவும் ஹேர்மன் குமார தெரிவித்தார்.

மீனவர்களுக்கு எரிபொருளை மானிய விலையில் தருவதாக அரசாங்கம் கூறுவதை நம்பமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னார், யாழ்ப்பாணம், வன்னி என வட பகுதி மீனவர்களையும் எரிபொருள் விலை கடுமையாகப் பாதித்துள்ளதால் வடபகுதி மீனவர்களையும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பி.பி.ஸி.யிடம் கருத்துத் தெரிவித்த வட மாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ். தவரட்ணம், மண்ணெண்ணெய்யை பெரும்பாலும் நம்பியிருக்கின்ற வட பகுதி மீனவர்கள், தேசிய மட்டத்தில் தென்னிலங்கை மீனவர்களுடன் இணைந்து தமது கோரிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக கூறினார்.

# இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரும் எண்ணம் கிடையாது

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லையென மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹ மட் நஷீட் தெரிவித்துள்ளார்.


மாலைதீவில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட இலங்கையின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். மாலைதீவு விவகாரத்தில் சர்வதேச சமூகம் கால தாமதமின்றி தலையீடுசெய்ய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாலைதீவை விட்டு வெளியேறும் திட்டம் கிடையாது எனவும், ஜனநாயகத்தை நிலைநாட்டப் போராடப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையுடனும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் மிக நெருங்கியதொடர்பு காணப்படுவதாகத் தெரித்துள்ளார்.

மாலைதீவில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்ட இலங்கை அரசாங்கமும், இலங்கை மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

# புதுக்குடியிருப்பு பிரதேச தேர்தல் 6000 பேர் வாக்குரிமைஇழப்பர்

## எச்சரிக்கிறது 'கபே'



(கொழும்பு)

புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று பிரதேசசபைகளுக்கு அடுத்த 24 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற சுமார் 6000 வாக்காளர்கள் தமது வாக்குரிமையை இழக்கவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்,

மெனிக் பாம் இடைத்தங்கல் முகாமில் கணிசமானளவு இடம்பெயர்ந்த மக்கள் உள்ளனர். இந்த இடைத்தங்கல் முகாமில் இருந்து சுமார் 62 தொடக் கம் 80 கி.மீ தொலைவிலேயே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதனால், அவர்களால் எப்படி வாக்களிக்க முடியும் என கேள்வி எழுகிறது. வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு அவர்களிடம் பணமோ அல்லது போக்குவரத்து வசதிகளோ கிடையாது.

அவர்களின் வாக்குரிமையை பாதுகாக்க அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனநாயக வழிமுறையில் அவர்களும் பங்களிக்க இதனை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தேர்தலில் 21 ஆயிரம் வாக்காளர்களும், கரைத்துறைப்பற்று பிரதேசசபைக்கு 23 ஆயிரம் வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராமேஸ்வரம் - தலைமன்னாருக்கான படகுச்சேவையை ஆரம்பிக்க ஆய்வு

(கொழும்பு)

இராமேஸ்வரம் - தலைமன்னாருக்கு இடையிலான படகுச்சேவையை மீள ஆரம்பிப்பது குறித்து அதிகாரிகள் சிலர் அரிச்சல்முனை பகுதிக்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

1980களில் இலங்கையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இராமேஸ்வரம் - தலைமன்னாருக்கு இடையேயான படகுச்சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

இச்சேவையை மீள ஆரம்பிக்கவென தூத்துக்குடி துறைமுகத் தலைவர் சுப்பையா, கப்பல் போக்குவரத்து செயலாளர் கே.மோகனதாஸ் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் இராமேஸ்வரம் - அரிச்சல்முனை சென்று ஆராய்ந்துள்ளனர்.

இந்த படகு சேவையை மீள ஆரம்பிப்பதன் பொருட்டு இராமேஸ்வரம் துறைமுகத்தில் புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை கடந்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பொருளாதார, சட்டச் சிக்கல்கள் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# மூன்று இந்திய மீனவர்கள் வடக்கு கடலில் கைது

(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அவர்களால் பயன்படுத்தப்பட்ட றோலர் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மீனவர்கள் வடபகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மீனவர்களை கான்கேசன்துறை பொலிஸில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

பேக்கரியில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளை அடுத்த வாரம் அதிகரிக்கவுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து பேக்கரியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலைகளையும் அதிகரிக்க வேண்டியுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# காப்புறுதி பெறாத படகுகளின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும்



(கொழும்பு)

மீன்பிடிச் சட்டத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய திருத்தங்களின் கீழ், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் படகுகளில் உள்ள மீனவர்கள் உயிர்காப்பு அங்கி களை அணிந்திருப்பது கட்டாயமாக்கப்படவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து மீன் பிடிப் படகுகளும் புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படுவது கட்டாயமாக்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார். காப்புறுதி பெறாத மீன்பிடி படகுகளின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும் என அவர் கூறினார்.

சிறிய சேதங்களுக்கு தனியார் காப்புறுதித் திட்டங்கள் நஷ்டஈடுகளை வழங்குவதில்லை. இதனால் புதிய திட்டத்தில் சிறிய சேதங்களையும் உள்ளடக்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்தார். இத்திட்டத்தின்கீழ் மீனவர்கள் 3 இலட்சம் ரூபா வரை நஷ்டஈடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர் கூறினார்.

# பணிப் பகிஷ்கரிப்பை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவே உள்ளது



(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ள நிலையில் பணிப்பகிஷ்கரிப்பை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கெமுனு விஜேரத்ன இதனைக் குறிப்பிட்டார். வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தாம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு நியாயமற்றது எனவும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் கெமுனு விஜேரத்ன சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் தாம் தொடர்ந்து பஸ் சேவையில் ஈடுபடுவதாக அகில இலங்கை தனியார் பஸ் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதான செயலாளர் அஞ்ஜன பிரியன்ஜி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தனியார் பஸ் துறைக்காக இன்றைய தினம் முதல் நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். இதற்கு தேவையான முறையொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 18 பிரதி பொலிஸ் மா அதிபர்கள் அடுத்த வாரம் புதிதாக நியமனம்

(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் புதிதாக 18 பிரதி பொலிஸ் மா அதிபர்களை நியமிக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

இதற்காக 58 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நேர் காணப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அடுத்த வாரம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படவுள்ளது. ஆணைக்குழுவின் சிபாரிசினை அடுத்து இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

ஒரு தொகை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் கடந்த வருடம் சேவையிலிருந்து ஒய்வு பெற்றுள்ளனர். அதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே இவர்கள் நியமிக்கப்படுவர்.

நாடு முழுவதும் 42 பொலிஸ் பிரிவுகளிற்கும் பிரதி பொலிஸ் மா அதிபர் அல்லது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இணைப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்படுகின்றனர் என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.